# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 210 குரோதி வருடம், பங்குனி மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(11.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 12, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12





கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் வடக்கு தமிழ் எம்.பிக்களை சந்தித்தபோது, வடக்கு கிழக்கில் விகாரைகள் அமைக்கப்படுவது குறித்து அவரிடம் சொல்லப்பட்டதாம்.

அதனை அவதானமாக செவிமடுத்த மோடி, இந்த ஆட்சியின் கீழும் அப்படி நடக்கிறதா? என்று கேட்டாராம்.

அதற்கு பதிலளித்த எம்.பிக்கள், இல்லை. அப்படியான சட்டவிரோத விகாரைகள் குறித்து இந்த அரசும் கண்டும் காணாமல் இருக்கிறது என்று விளக்கினாராம். ஓ.. அப்படியா? அப்படியானால் நான் இந்த விடயத்தைப் பேச வேண்டிய இடத்தில் பேசுகிறேன் என்று அதன்போது பதிலளித்தாராம் மோடி.

















# சீனாவுக்கு 125 வீத வரி; வரி விதிப்பு 90 நாள் நிறுத்தம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி

» 08பக்கம்

# அமெரிக்க வரிப் போரை கூட்டாக எதிர்கொள்வோம்!



## சர்வகட்சி கூட்டத்தில் அனைத்துக்கட்சிகளும் ஏகமனதாக தீர்மானம்

» 02பக்கம்

## நிராகரித்த 35 வேட்புமனுக்களை மீளப்பெறுமாறு நீதிமன்றம் உத்தரவு



பிறப்புச் சான்றிதழ், சமாதான நீதவானின் சான்றிதழ் மற்றும் அரசியலமைப்பில் 07ஆவது உப பிரிவின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டிய சத்தியக்கடதாசி தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கலின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும்....

» 02பக்கம்

## அதிவேக வீதி போக்குவரத்துக்கு வங்கி அட்டை பயன்பாடு

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பதற்காக வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்த அனுமதிக்கும் முன்னோடித் திட்டம் இந்த வாரம் ஆரம்பிக்கப்படுமென்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.


கொட்டாவ மற்றும் கடவத்தை இடமாறும் பகுதிகளுக்கு இடையே இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலை பயணக் கட்டணங்களை டெபிட் மற்றும் கிரடிட் அட்டைகள் மற்றும் QR குறியீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சகல வேலைத்திட்டத்தின் பின்னர் மே மாதத்திலிருந்து நாட்டிலுள்ள சகல அதிவேக நெடுஞ்சாலைகளிலும் வங்கி அட்டைகளினூடாக கட்டணம் செலுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.



## அதி உயர் பாதுகாப்பு வலய பலாலி வீதி திறந்துவைப்பு





புஃ.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த பலாலி வீதியானது நேற்று (10) திறந்து வைக்கப்பட்டது.

அச்சுவேலியில் இருந்து பருத்தித்துறை கடற்கரை நோக்கிச் செல்கின்ற வீதியே இவ்வாறு முழுமையாக நேற்றுக் காலை 6.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் பயணிகள் பஸ்கள், பொதுமக்கள் ... » 02 பக்கம்

## சட்டத்தின் ஆட்சியில் கட்டுப்பாடுகள் ஏன்?

### பலாலி வீதி திறப்பு தொடர்பில் சுமந்திரன் கேள்வி

''தேர்தல் நோக்கங்களுக்காக மாத்திரமா அதி உயர் பாதுகாப்புப் பிரிவில் இருந்த வீதிகளை திறக்க வேண்டும். அவ்வாறு திறக்கப்பட்ட பலாலி வீதியை ஏன் பாதசாரிகள் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை'' என்று முன்னாள்... » 02 பக்கம்

## தேசபந்துவுக்கு பிணை



விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை...

» 02 பக்கம்

## ஏப்ரலுக்கான சம்பள பற்றாக்குறை 25இல்

### பொலிஸாருக்கு தனியான கொடுப்பனவு வியூகம்

அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய சம்பளக் கொடுப்பனவின் அடிப்படையில் ஏப்ரல் மாதத்துக்கான பற்றாக்குறை கொடுப்பனவை எதிர்வரும் 25ஆம் திகதி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து பொது நிர்வாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக்க பண்டாரவினால் ஏனைய அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணங்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களப் பிரதானிகளுக்கு சுற்றறிக்கையினூடாக அறிவித்திருக்கிறார்.

மேலும் அந்த சுற்றறிக்கையில், அரச உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ஏப்ரல் மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவு நேற்றுடன் (10) கட்டாயம் செலுத்தி நிறைவு செய்ய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

# புதியதொரு தேசத்தை உருவாக்கும் கனவுக்காக இடைவிடாமல் போராடுவோம்!

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



"பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக புதிதாகும் எதிர்பார்ப்புகளை அடையாளப்படுத்தும், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை, நாடு என்ற வகையில் பல வெற்றிகளை அடைந்துகொண்டு, சிறந்த மற்றும் புதியதொரு தேசத்தை உருவாக்கும் கனவுக்காக இடைவிடாமல் போராடும் வேளையில் நாம் கொண்டாடுகிறோம்" என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வீழ்ச்சியடைந்திருந்த நமது நாட்டை கடந்த சில மாதங்களாக மீண்டும் கட்டியெழுப்பி, பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக புதிய நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளோம். அந்த வெற்றிகள் அனைத்தும் இந்நாட்டு மக்களுக்கே உரித்தாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையே நாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

மேலும், மக்கள் வாழ்வை புதுப்பித்துக்கொள்ளவும் பிற்போக்கான மனப்பாங்கு மற்றும் சிந்தனை அற்ற புதிய மனிதனை உருவாக்குவதுமே சூரிய பெயர்ச்சியுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் பொதுவான எதிர்பார்ப்பாகும். இவ்வாறு நாம் புதிதாவதால் மாத்திரமே புத்தாண்டு நமது வாழ்வுக்கு புதிய ஆரம்பத்தை தரும்.

நாட்டுக்குத் தேவையான புதிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றிபெறச் செய்யவும் நாட்டையும் மக்களையும் வெற்றிபெறச் செய்வதற்காகவும் இந்த புத்தாண்டில் அனைவரும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்துக்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" நோக்கிய பயணத்தின் எதிர்பார்ப்புக்களை ஒளிரச் செய்யும் செழிப்பான புத்தாண்டாக அமையட்டும்!

# மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணைவோம்!

## எதிர்க்கட்சித் தலைவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



இலங்கையர்களின் சிறப்பான கலாசார விழாவான சிங்கள - தமிழ் புத்தாண்டுக்காக எமது நாட்டின் அன்பான மக்களுக்கு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அனைவரின் உள்ளங்களிலும் செழிப்பின் ஒளி பிறக்குமென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவரது தமிழ்- சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும்,

இந்தப் புத்தாண்டில் வழக்கமான சவால்களுடன் புதிய சவால்களும் நம் முன் உள்ளன. அவற்றைச் சரியாக நிர்வகித்து நாட்டையும் மக்களையும் முன்னேற்றத்துக்கு அழைத்துச் செல்வது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும். எனவே, இதன் உண்மையான பொருளைப் புரிந்துகொண்டு, கூட்டு முயற்சியின் மூலம் நமக்கெதிரான சவால்களை வென்று அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த புத்தாண்டுக்கேற்ப நாம் அனைவரும் செயற்பட வேண்டும். ஒரு நாடாக நாம் எதிர்கொள்ளும் சவால்களை அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக எதிர்கொண்டு, அந்தச் சவால்களை வென்று அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பை நோக்கிய இந்தப் பயணத்தில் அனைவரின் உள்ளங்களிலும் துக்கம், கண்ணீர், வலி இல்லாமல் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணையுமாறு உலகெங்கிலுமுள்ள இலங்கையர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துகள் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசபந்துவுக்கு...

பிணையில் விடுவிக்குமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு வெலிகம ஹோட்டலொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தபோதும் தேசபந்து தென்னக்கோன் 20 நாட்களுக்கு மேல் தலைமறைவாகியிருந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அமெரிக்க வரிப்போரை...

அமெரிக்கா விதித்திருக்கும் வரியை எப்படி எதிர்கொள்வது அவற்றுக்கான தீர்வு என்ன என்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான சர்வகட்சி கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கை இலங்கைக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (10) காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அமெரிக்க புதிய இறக்குமதி வரிக் கொள்கை தொடர்பாக அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

வரி அதிகரிப்பை எவ்வாறு சமாளிப்பது அதற்கு ஏற்றவாறான வர்த்தகப் பற்றாக்குறை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளல் என்பன குறித்து இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை (05) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி இங்கு விளக்கமளித்துள்ளார்.

இந்த வரி விதிப்பின்போது நாடென்ற ரீதியில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தும், எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியமான நிவாரணங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் விரைவில் அமெரிக்க அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் இங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி, வரிக்குறைப்பு தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அங்கு நடத்தப்படும் பேச்சு குறித்து விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்வது போல அங்கிருந்து எரிபொருளை இறக்குமதி செய்து வர்த்தகப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கும் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக இந்த சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடிக்கடி இவ்வாறான சந்திப்புகளை நடத்துவதென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக்கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தக அமைச்சின் செயலாளர் ஏ.விமலேந்திரராஜா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, வெளிவிவகார அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் தர்ஷன பெரேரா, இலங்கை வணிகச் சபையின் தலைமை பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, பிரண்டிக்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர், மாஸ் ஹோல்டிங்ஸ் இணை நிறுவுனர் ஷெராட் அமலீன், ஹேலிஸ் குழுமத் தலைவர் மோகன் பண்டிதகே மற்றும் ஆனந்த கல்தேரா, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்த பேச்சுவார்த்தையின் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நிறைவடைந்தது. சாதகமானதாக இருந்தாலும் வெளியில் தகவல் வெளியிடாமல இருப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தோம்" என்று சர்வசன அதிகார கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சிக்கலான பல்லேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக தெரிவித்தார்.

"எங்களால் முன்வைக்கப்பட்ட அநேகமான யோசனைகள் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதியின் விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் அவரின் நிலைப்பாடுகளும் எங்களால் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகளிலும் பெரிதும் வேறுபாடு இருக்கவில்லை. எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. சந்தைவாய்ப்பு மற்றும் விஸ்தரிப்பு தொடர்பிலும் கலந்துரையாடினோம்" என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டார். "கட்சிப் பேதமின்றி மிகவும் வெற்றிகரமான பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தோம். அமெரிக்காவின் தீர்வை வரியை மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்த அந்த நாட்டின் அரசு தீர்மானித்துள்ளது. எனவே, இந்த மூன்று மாதங்களுக்குள் அமெரிக்க அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த தீர்வை வரியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க திறமையாக செயற்பட வேண்டும். விசேடமாக ஏனைய உலக நாடுகளின் சந்தைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவுடன் இருக்கும் தொடர்புகள் குறித்தும் இந்தியாவுடனான பாலத்தினூடாக போக்குவரத்து தொடர்புகளை பேணுவதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தோம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரியை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினோம். தொடர்ந்தும் இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டோம். அந்த பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகளற்ற ஒத்துழைப்பை வழங்கவும் எதிர்பார்க்கிறோம்." என காவிந்த ஜயவர்தன எம்.பி. சுட்டிக்காட்டினார்.

## நிராகரித்த...

பொறுப்பேற்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (10) சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அதற்கமைய, நிராகரிக்கப்பட்ட 35 வரையான வேட்புமனுக்களை மீண்டும் பொறுப்பேற்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வேட்புமனுக்களை நிராகரித்தமைக்கெதிராக அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களால் முன்வைக்கப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரின் பங்குபற்றலுடனான நீதியரசர்கள் குழாமினால் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் தீர்ப்பை அறிவித்து நீதியரசர்கள் குழாம், சமாதான நீதவானினால் சான்றுரைக்கப்பட்ட வேட்புமனுக்கள் மற்றும் சத்தியக்கடதாசி தொடர்பில் ஏற்பட்ட சிக்கலின் அடிப்படையில் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு தெரிவத்தாட்சி அதிகாரிகள் எடுத்த தீர்மானம் நியாயமானது என்று உயர்நீதிமன்றத்தால் கடந்த 04ஆம் திகதி வெளியிடப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான வழக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அரச பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளதாக அறிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த விடயம் தொடர்பில் தமது நீதிமன்றத்தால் இதற்கு முன்னர் பெற்றுக்கொடுக்கப்பட்ட தீர்ப்பை மீண்டும் ஆராயுமாறும் இந்த விடயம் தொடர்பில் புதிதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பரிசீலனை செய்ய வேண்டாமென்றும் அரச பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் கோரியிருந்ததாக நீதியரசர் அவரின் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருந்தபோதும் தமது நீதிமன்றத்தில் அந்தத் தீர்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்றத்தால் குறித்த பரிசீலனை செய்திருக்கப்படவில்லையென்று தெரிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் உயர்நீதிமன்றத்தின் அந்தப் பரிசீலனை தற்போதைய சந்தர்ப்பத்தில் தனது நீதிமன்றத்துக்கு அவசியமில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு தெரிவத்தாட்சி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை அதிகாரபூர்வமற்றதாக அறிவித்து ரிட் கட்டளையொன்றை பிறப்பிக்குமாறும் நீதியரசர் குறிப்பிட்டுள்ளார். பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சுயாதீனக் குழு உள்ளிட்ட அரசியல் கட்சிகளினால் அவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கெதிராக இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதி உயர் பாதுகாப்பு ...

எனப் பலரும் மிகவும் மகிழ்ச்சியாக இந்த வீதியால் பயணிப்பதை அவதானிக்க முடிந்தது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று நடைபெற்றது. இதன்போது, அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் இருந்த குறித்த வீதியை விடுவித்து மக்களின் பாவனைக்கு கையளிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கோரிக்கை முன்வைத்தார்.

இந்நிலையில், நேற்றையதினம் குறித்த வீதி திறந்துவைக்கப்பட்டது. இதன்போது அந்த வீதியில் பயணிப்பதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு,

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் அறிவித்தல்:

இந்த வீதியானது பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இராணுவக் குடியிருப்பினூடாகச் செல்லும் வீதியாகும். இந்த வீதியினூடாகப் பயணிக்கும் அனைவரும் கீழ்க்காணும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

01. வீதி திறக்கப்படும் நேரம் மு.ப. 06.00 மணி தொடக்கம் பி.ப. 05.00 மணி வரை மாத்திரமே.

02. வீதியினுள் பயணிக்கும் வாகனங்களை இடையில் நிறுத்துதல், திருப்புதல் தடைசெய்யப்பட்டுள்ளன.

03. வீதியில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் வீதியின் இருபுறமும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு செய்தல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன.

04. இந்த வீதியூடான நடை பயணங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

05. இந்த வீதியில் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் தவிர்ந்த ஏனைய பாரவூர்திகள் பயணிக்கத் தடை.

06. இந்த வீதியில் செல்லக்கூடிய வேகம் ஆகக்கூடியது 40 கி.மீ. மாத்திரமே.

07. இந்த வீதியில் பயணிக்கும் சாரதிகள் மற்றும் அனைவரும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆவணங்களைப் பயணத்தின்போது வைத்திருத்தல் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை மீறுதல் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய குற்றமாகும்.

## சட்டத்தின் ...

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ். பலாலி வீதி அதி உயர் பாதுகாப்பிலிருந்து போக்குவரத்துக்காக நேற்று (10) திறக்கப்பட்டமை குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கட்டுப்பாடுகளுடன் பலாலி வீதி திறக்கப்பட்டதை வரவேற்கின்றோம். ஆனால், சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்தவர்கள் கட்டுப்பாடுகளை விதிக்க முடியுமா? இந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக சட்டபூர்வமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பகுதியில்லை.

மாலை 06 மணியிலிருந்து அதிகாலை 05 மணிவரை போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தச் சட்டம் உங்களுக்கு அனுமதி வழங்கியது? ஏன் பாதசாரிகள் இந்த வீதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை? அதனை விட முக்கியமான கேள்வி, தேர்தல்கள் நெருங்கும்போதுதான் வீதிகளைத் திறப்பீர்களா?

## ஏப்ரலுக்கான...

2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்துக்கமைய அரச உத்தியோகத் தர்களுக்கான சம்பளத் திருத்தத்தை மேற்கொள்ள வலியுறுத்தி இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஏதாவதொரு நிறுவன அதிகாரிகளுக்கு புதிய சம்பளத் திருத்தத்தின் அடிப்படையில் நேற்று கொடுப்பனவை ஏதாவதொரு காரணத்துக்காக செலுத்த முடியாமல் போயிருந்தால் மே மாதம் வரை காத்திருக்காமல் இம்மாதம் 25ஆம் திகதியாகும்போது இம்மாதத்துக்கான பற்றாக்குறைக் கொடுப்பனவை கட்டாயம் செலுத்த வேண்டுமென்று பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சிமன்ற அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான குறைந்தபட்ச மாதாந்தக் கொடுப்பனவு 24,250 ரூபாவிலிருந்து 40,000 ரூபா வரை 15,759 ரூபாவால் அதிகரிக்க வரவு - செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பொலிஸாருக்கென தனியான சம்பள வியூகமொன்றைத் தயாரிப்பதற்கு தற்போது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று (10) சபையில் அறிவித்தார். அதற்கு அவசியமான சட்டமூலம் பதில் பொலிஸ் மா அதிபரால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சுடன் கலந்துரையாடியதன் பின்னர் 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட யோசனைக்காக இந்தப் புதிய சம்பள வியூகத்தை சமர்ப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபைச் சட்டத்தின் விதிகள் மற்றும் பிரிவு 58 (2), 119 (1) மற்றும் 120 (3) ஆகியவற்றின் அடிப்படையில் கௌரவ நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்

**அத்தனகல்ல | நீதவான் நீதிமன்றத்தில் 17.01.2025 திகதியிடப்பட்ட வழக்கு எண் 23133 இல், உடுகம்பொல, தொரணகொட, எண் 3B ஐச் சேர்ந்த ஆச்சாரிகே லலித் சந்திரசிறி என்பவர் பின்வரும் இரண்டு (02) குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார்.**

1. **தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் மேற்கத்திய மருந்துகளை சேமித்து வைத்தல்.**

2. **காலாவதியான மருந்துகளின் விற்பனை.**

**அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நான் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு எனக்கு (ரூபாய் ஐம்பத்தைந்தாயிரம்) ரூபாய் 55,000/- அபராதம் விதிக்கப்பட்டதை இலங்கையருக்குப் பகிரங்கப்படுத்தினேன். அந்த இரண்டு (2) குற்றச்சாட்டுகள்.**

**எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களை நான் மீண்டும் செய்யமாட்டேன் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் முழு இலங்கை மக்களிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.**

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் பங்குனி மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப் படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிதுனம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**கடகம்** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**சிம்மம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**கன்னி** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப் படைவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் ரீதியில் பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**தனுசு** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

**மகரம்** வெளிநாட்டுப் பயணம் நினைத்தது போல நிறைவேறும். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**மீனம்** நினைத்த காரியத்தில் வெற்றி, நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.

| | |
|---|---|
| **திதி:** | சதுர்தசி பி.இ.3.21 வரை பின் பௌர்ணமி |
| **நட்சத்திரம்:** | உத்திரம் பி.ப.3.10 வரை பின் அஸ்தம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | சித்த யோகம் பி.ப.3.10 வரை பின் அமிர்த |
| **வார சூலை:** | மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை 6.03 – 9.03 மணிவரை காலை10.03 – 10.33 மணிவரை பகல் 1.03 – 3.03 மணிவரை மாலை 5.03 – 6.03 மணிவரை |
| **ராகு காலம்:** | 10.33 – 12.03 மணி வரை |
| **எமகண்டம்:** | 3.03 – 4.03 மணிவரை |
| **குளிகை :** | 7.33 – 9.03 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | :கும்ப ராசியினர் |

எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று பிற்பகல் 3.10 மணிவரை**

பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 3.10 மணிக்குமேல்**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

| | |
|---|---|
| **விசேட தினம்:** | பங்குனி உத்திரம், திருக்கோணேசுவரர் கொடி, நவநாத சித்தர் குரு பூசை |



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# புத்தாண்டு காலப்பகுதியில் பஸ் ஆசன முன்பதிவு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானம்



சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் பயணிகளுக்காக ஆசனங்களை முன்பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதிவரை முன்பதிவு நடவடிக்கை இடைநிறுத்தப்படவுள்ளது.

பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனைத்தவிர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத்தில் பஸ்கள் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாரதியொருவரின் கடமை நேரம் 14 மணித்தியாலங்களுக்கு மேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றுமொரு சாரதியை பணிக்கமர்த்த வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து பஸ்களை விசேட சுற்றுலாப் பயணங்களுக்கு ஈடுபடுத்துவதும் புத்தாண்டு காலப்பகுதியில் தடைசெய்யப்பட்டுள்ளது.

# தேர்தலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள சபைகள் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. சுட்டிக்காட்டு



''ஒருசில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பணிகளை நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது. இவ்வாறு தேர்தலுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள சபைகள் தொடர்பில் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. எனவே மே 06ஆம் திகதி எந்த சபைகளுக்கு தேர்தல் நடைபெறும் என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்'' என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி. நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற பெறுமதி சேர் (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தீர்வை வரி உலகளாவிய ரீதியில் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. இலங்கையின் சேவை மற்றும் இதர துறைகளும் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையினால் பெரும்பாலான வலய நாடுகள் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அப்பாற்பட்டு செயற்பட உத்தேசித்துள்ளன.

நாடு என்ற ரீதியில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிக்கொள்வது என்பது அரசாங்கத்துக்கு சவால்மிக்கது. அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள 44 சதவீத தீர்வை வரியை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது? அமெரிக்காவின் புதிய வரி கொள்கை தொடர்பில் பெரும்பாலான நாடுகள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இருந்தே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. ஆனால் இங்கு வரி விதிக்கப்பட்டதன் பின்னரே அரசாங்கம் குழு அமைத்து ஆய்வுசெய்ய தீர்மானித்துள்ளது. அமெரிக்காவின் தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

நெருக்கடியான நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு வீதிக்கு இறக்கி மக்களை நெருக்கடிக்குள்ளாக்கமாட்டோம். பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு எவ்வாறு அமெரிக்காவின் தீர்மானத்தை முகாமைத்துவம் செய்வது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

ஒருசில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பணிகளை நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது. இவ்வாறு தேர்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள பிரதேச சபைகள் தொடர்பில் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. மே 06ஆம் திகதி எந்த சபைகளுக்கு தேர்தல் நடைபெறும் என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்'' என்றார்.

# காணாமல்போனோர் குறித்த அரசாங்கத்தின் பொறிமுறையை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவிப்பு



அரசியல் கைதிகள் தொடர்பான விபரங்களை தருமாறு பிரதமர் என்னிடம் கோருகிறார். இந்த அரசாங்கத்தில் அவர் தான் பிரதமர் என்பதை அவர் விளங்கிக் கொள்ள வேண்டும். பட்டியலை நீதியமைச்சரிடம் கேளுங்கள். முடியாவிடின் பிரதமர் பதவியை எனக்குத் தாருங்கள் பட்டியலை நான் எடுத்து தருகிறேன் எனக் கூறிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஆகியவற்றை காணாமல் போனோரது போராட்டத்துக்கான தீர்வாக அரசாங்கம் குறிப்பிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த பொறிமுறையை புறக்கணிக்கிறார்கள். நீதிமன்ற பொறிமுறையை தவிர்த்து மாற்று பொறிமுறைகளை ஏற்பதற்கு எமது மக்கள் தயாரில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தில் கேள்விகளை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த சாணக்கியன் எம்.பி. மேலும் கூறுகையில்,

''நான் முன்வைத்த கேள்விகளுக்கு பிரதமர் வழங்கிய ஒருசில பதில்கள் திருப்தியற்றவை. அடையாளப்படுத்தப்பட்ட வழக்குகள் என்றால் என்னவென்பதை பிரதமர் அறிவார். கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளில் பலர் கொல்லப்பட்டார்கள். காணாமலாக்கப்பட்டார்கள். இவ்விடயம் தொடர்பான பட்டியலை கடந்த அமர்வில் நீதியமைச்சருக்கு கையளித்திருந்தோம்.

திருகோணமலை படுகொலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற படுகொலைகள், 2009ஆம் ஆண்டு வைத்தியசாலை மீது குண்டுத்தாக்குதல் நடத்தியமை தொடர்பில் புதிதாக குறிப்பிட வேண்டிய அவசியம் கிடையாது. அனைத்து வழக்குகளையும் விரைவாக விசாரிக்க முடியாது என்பதை நாங்களும் அறிவோம். இதனால் தான் அடையாளப்படுத்தப்பட்ட வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்கிறோம்.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஆகியவற்றை காணாமல்போனோரது போராட்டத்துக்கான தீர்வாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த பொறிமுறையை புறக்கணிக்கின்றார்கள். நீதிமன்ற பொறிமுறையை தவிர்த்து மாற்று பொறிமுறைகளை ஏற்பதற்கு எமது மக்கள் தயாரில்லை.

காணாமல்போனோர் விவகாரம் மற்றும் அடையாளப்படுத்தப்பட்ட வழக்குகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிடக் கூடிய வகையில் ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். நான் விருப்பம் கொள்ளும் அடையாளப்படுத்தப்பட்ட வழக்குகளை குறிப்பிடுமாறு பிரதமர் கூறுகின்றார். இந்த நாட்டில் இடம்பெற்ற அனைத்து சம்பவங்களும் முக்கியமானவை. எனவே விசாரணைகளை அரசாங்கம் தான் மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் கைதிகள் தொடர்பான விபரங்களை தருமாறு பிரதமர் என்னிடம் கோருகிறார். இந்த அரசாங்கத்தில் அவர் தான் பிரதமர் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். பட்டியலை நீதியமைச்சரிடம் கேளுங்கள். முடியாவிடின் பிரதமர் பதவியை தாருங்கள் பட்டியலை நான் எடுத்துத் தருகிறேன்.

காணி அபகரிப்பை கடந்த அரசாங்கம் மேற்கொண்டதாக குறிப்பிடுகின்றீர்கள். இதனால் தான் மக்கள் அவர்களை புறக்கணித்து உங்களை ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய பகுதிகளில் இன்றும் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இது தான் எமது அடிப்படை பிரச்சினை'' என்றார்.

# ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு விளக்கமறியல்

**(ஹனபி எம். தாஸீம்)**

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரை தாக்கி காயப்படுத்தியமை மற்றும் 28க்கும் மேற்பட்ட ஐஸ் போதை மாத்திரைகளை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் இரண்டு மகன்களை எதிர்வரும் 21ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மஹர எண் 01 நீதிமன்ற நீதிபதி காஞ்சனா டி சில்வா நேற்று முன்தினம் (09) பிற்பகல் உத்தரவிட்டார்.

கடவத்தை, ரணஜயகம பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் இரண்டு மகன்கள் ஆகியோரே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இளைய மகன் 18 வயதுக்குக் குறைவானவன் என்பதால், அவர் மாகொல நன்னடத்தை இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவு உட்பட பொலிஸ் அதிகாரிகள் குழு அங்கு சென்றது. அந்த நேரத்தில், அங்கு 28க்கும் மேற்பட்ட ஐஸ் மாத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர் வீட்டிலிருந்த குடும்ப உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த நேரத்தில், அவர்கள் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கி, அவர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தனர். மூன்று பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டை பொலிஸ் அதிகாரிகள் சோதனை செய்தபோது, குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியுடன் அவர்களுக்கு வாக்குவாதம் ஏற்பட்டது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது. எனவே, இந்த விடயத்தை களனி பிரிவு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பணியகத்தின் விசாரணைக்கு பரிந்துரைக்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம் என சந்தேக நபர்கள் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் வீரேந்தா கனன்கேகே நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் முன்வைத்த கருத்துகளை கவனித்தில் கொண்ட நீதவான், நான்கு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# விபத்துகளுடன் தொடர்புடைய இறப்புகள் அதிகரிப்பு

விபத்துகளுடன் தொடர்புடைய சுமார் 30 முதல் 35 வரையான இறப்புகள் தினமும் பதிவாவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அபிவிருத்தி பணியகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது உரையாற்றிய சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் டாக்டர் சமிதா சிறிதுங்க இதனைத் தெரிவித்தார்.

டாக்டர் சிறிதுங்கவின் கூற்றுப்படி, நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 10,000 முதல் 12,000 வரையான இறப்புகள் பல்வேறு விபத்துகளால் ஏற்படுகின்றன.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் விபத்துகளால்தான் அனுமதிக்கப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

தற்போதைய போக்கின்படி, அடுத்த 05 முதல் 10 ஆண்டுகளில், இந்த எண்ணிக்கை மேலும் 200,000 முதல் 300,000 வரை அதிகரிக்கக்கூடும் என்று டாக்டர் சமிதா சிறிதுங்க குறிப்பிட்டார்.

எனவே, இந்நிலைமையை மாற்றியமைக்க ஒருங்கிணைந்த திட்டத்துக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

# கம்பஹா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரத்தில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி!



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் சந்திப்பும் தேர்தல் பிரசார அலுவலக திறப்பு விழாவும் கஹட்டோவிட பிரதேசத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

இதன்போது, ஐக்கிய தேசிய கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களை சந்தித்த பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ



**(மீராநகர் செய்தியாளர்)**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நிந்தவூர் பிரதேச சபைக்காக போட்டியிடும் வேட்பாளர்களுடனான விசேட சந்திப்பு நேற்று (10) நிந்தவூர் மத்திய வட்டார வேட்பாளர் ஏ.இப்திகார் அஹமட்டின் இல்லத்தில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச பிரதான செயற்பாட்டாளரும் வேட்பாளருமான சம்சுன் அலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிராமிய அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், நிந்தவூர் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் நிந்தவூர் உறுப்பினர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வாறு மேற்கொண்டு செல்வது, அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்பன குறித்து பிரதியமைச்சர் வேட்பாளர்கள் மத்தியில் விரிவாக விளக்கமளித்தார்.

# தேர்தல் விதிமுறையை மீறி வைக்கப்பட்ட ஜனாதிபதியின் விளம்பரப் பதாகை

**(மட்டக்களப்பு செய்தியாளர்)**



தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாக அமைக்கப்பட்ட ஜனாதிபதியின் விளம்பர பதாகை அகற்றப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்பு முதல் தடவையாக நாளை சனிக்கிழமை (12) மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது வருகையை அறிவிக்கும் பதாகைகள் கட்சியினால் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

இவை தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என மாவட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து நேற்று முன்தினம் (09) இரவு மாவட்ட பொலிஸாரினால் இப்பதாகைகள் அகற்றும் பணிகள் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.சுபியான் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன.

மாவட்ட செயலக தேர்தல் கண்காணிப்பு குழு உயர் அதிகாரிகளும் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 11 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# சனத்தொகை மதிப்பீடும் நாட்டின் நிலைவரமும்!

இலங்கையில் சனத்தொகைக் கணக்கெடுப்பு விவரங்கள் வெளியாகியிருக்கின்றன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 'குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2024' அறிக்கை கடந்த திங்கட்கிழமை (07) காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

2024 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்தத் தொகைமதிப்பு முதற்கட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் குடிசனம், குடிசன வளர்ச்சி மற்றும் மாவட்ட அடிப்படையிலான சனத்தொகைப் பரவல் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திச் செயல்முறைக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்க அரசாங்கம் அல்லாத ஏனைய நிறுவனங்களுக்கு இந்தக் குடிசனக் கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் மிகவும் முக்கியமானவை. குடிசன தொகைமதிப்பு வரலாற்றில் முதல் தடவையாக டெப்லெட் கணினிகள் மற்றும் கைபேசிகளைப் பயன்படுத்தி தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது விசேட அம்சமாகும்.

புதிய அறிக்கையின்படி நாட்டில் இறப்பு வீதம் அதிகரித்திருக்கின்ற அதே சமயம், பிறப்பு வீதம் கணிசமாகக் குறைந்திருப்பதாகத் துறைசார் நிபுணர்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

குடும்பங்களில் நாம் இருவர், நமக்கு இருவர் என்ற எண்ணப்பாடு போய், அது நாம் இருவர், நமக்கு ஒருவர் என மாறி, இப்போது நாம் இருவர், நமக்கேன் இன்னொருவர் என்ற கருத்தியல் போக்கு வந்து விட்டதோ என்று சந்தேகிக்கும் நிலைமை வந்துள்ளது.

முன்னைய ஆண்டுகளில் மூன்று இலட்சத்து 60 ஆயிரமாக இருந்த வருடாந்தப் பிறப்புகளின் எண்ணிக்கை தற்போது இரண்டரை இலட்சத்திலும் விட குறைந்துவிட்டதெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது, இலங்கையில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சினையாக அவதானிக்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கம்தான் வறுமைக்குக் காரணமென்று உணர்ந்த அரசுகள், முன்னர் மக்கள் தொகைப் பெருக்கத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தின. ஆனால், அதன் விளைவுகள் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தின. முதியோர்கள் அதிகமாகவும் இளைஞர்கள் இல்லாத நிலையும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

அதனால் முன்னர் தாங்கள் எடுத்த நிலைப்பாடு பாரதூரமான விளைவுகளைத் தருவதை உணர்ந்து கொண்ட அந்த நாடுகள் இப்போது குழந்தைப் பிறப்பை ஊக்குவிக்கின்றன. இதற்கு சீனா நல்ல உதாரணம்.

முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து, இளம் சமுதாயம் குன்றி வருவதன் ஆபத்தான நிலைமையை உணர்ந்து கொண்ட சீனா இப்போது குழந்தை பெறுவதை ஊக்குவித்து பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் மக்கள் தொகையில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது இறப்பு வீதத்தை உயர்த்துகின்றது. மருத்துவ முன்னேற்றங்கள் மக்களை நீண்ட காலம் உயிர்வாழ வைத்தாலும், இறுதியில் வயது தொடர்பான நோய்கள் இறப்பை அதிகரிக்கின்றன.

தொற்று நோய்கள் ( கொரோனா போன்றவை) அல்லது நாட்பட்ட நோய்கள் (இதய நோய், நீரிழிவு நோய், புற்றுநோய்) அதிகரிப்பது இறப்பு வீதத்தை உயர்த்துகிறது.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள், புகைப்பிடித்தல், மது அருந்துதல், உடற்பயிற்சி இன்மை போன்றவை நோய்களை அதிகரித்து இறப்பு வீதத்தைப் பாதிக்கின்றன. மருத்துவ வசதிகளின் பற்றாக்குறை, சில பகுதிகளில் தரமான சுகாதார சேவைகள் கிடைக்காமலிருப்பது அல்லது தாமதமாகக் கிடைப்பது இறப்புகளை அதிகரிக்கின்றன.

சுற்றுச்சூழல் காரணிகள்: மாசுபாடு, காலநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர்கள் (வெள்ளம், புயல்) போன்றவை இறப்பு வீதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்கள்: வறுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு, போதிய வாழ்க்கை வசதிகள் இல்லாமை ஆகியவை இறப்பு வீதத்தை உயர்த்துகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை நீண்ட மூன்று தசாப்த கால யுத்தம், அதனால் ஏராளமான இளம் சமூகத்தவர்கள் கொல்லப்பட்டமை, அகதி வாழ்க்கை, இடப்பெயர்வுகள், சிறை வாழ்க்கை, கடத்தப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, இயற்கையிடர்களான சுனாமி, கொரோனா மரணங்கள் போன்றவை நாட்டில் பிறப்பு வீதத்தை வீழ்ச்சியடைய வைத்துள்ளன.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தம்பதிகள் குழந்தைகள் பெற்றுக்கொள்வதை தாமதமாக்கும் நிலைமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் திருமணம் செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 10 வீதத்துக்கு மேல் குறைவடைந்துள்ளமை கவனிக்கப்பட்டுள்ளது.

இவை மக்கள் சனத்தொகைப் பெருக்கத்தில் பாதகமான விளைவை ஏற்படுத்துமெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.


பிறப்பு வீதங்கள் குறைவதற்கு பல காரணங்கள் உள்ளன. மேலும் இவை உலகளவில் மற்றும் குறிப்பிட்ட பிராந்தியங்களில் வேறுபடலாம்.

பெண்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு, குடும்பத் திட்டமிடல் மற்றும் பிறப்பு கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை அதிகரித்துள்ளது. இதனால், பலர் சிறிய குடும்பங்களை விரும்புகின்றனர். பொருளாதாரக் காரணிகள்: குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவு அதிகரிப்பு (கல்வி, சுகாதாரம் போன்றவை) மக்கள் குறைவான குழந்தைகளைப் பெறுவதற்கு ஒரு காரணமாகவுள்ளது.

நகர்ப்புற வாழ்க்கை முறை மற்றும் வேலைவாய்ப்பு அழுத்தங்கள் காரணமாக திருமண வயது தள்ளிப்போவது மற்றும் குழந்தை பெறுவதைத் தாமதப்படுத்துவது அதிகரித்துள்ளது. குழந்தை இறப்பு வீதம் குறைந்ததால் அதிக குழந்தைகளைப் பெறவேண்டிய அவசியம் குறைந்துள்ளது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சலுகைகள் ( இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் சலுகைகள்) பிறப்பு வீதத்தைக் குறைக்க உதவியுள்ளன.

ஒரு காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவித்து சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்திய இலங்கை உட்பட்ட நாடுகள், அவற்றின் சமூகத் தரங்களையும் சமுதாய சமநிலையையும் தக்கவைப்பதற்காக மீண்டும் மக்களை குழந்தைப் பிரசவங்களுக்குத் தூண்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

# நல்லதும் தீயதும்!



வாழ்க்கையில் நல்லது கெட்டதைத் தெரிந்து கொள்வதற்கு எப்போதும் ஆவலாகக் காத்திருக்கும் வாசகப் பெருமக்களே வணக்கம்!

ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல ஒவ்வொருவர் வாழ்க்கை அனுபவத்திலும் ஒவ்வொரு கட்டத்திலும் நல்லது தீயது எனும் இரண்டையும் கடந்தேதான் வாழவேண்டியிருக்கிறது. நல்ல அறம் சார்ந்த வாழ்க்கை வாழவேண் டும் என்பதுதான் மனிதர் ஒவ்வொருவரி னதும் குறிக்கோளாக இருந்தாலும் அதற்கு முன்னதாக எது நல்லது, எது கெட்டது என்பதைப் புரிந்து கொள்வதிலேயே பாதி வாழ்க்கை கழிந்துபோய் விடுகிறது. அதனால்தான் மகாகவி பாரதியும்

"நல்லது தீயது நாம் அறியோம் அன்னை
நல்லது நாட்டுக! தீயது ஓட்டுக!"

- என்று பராசக்தியிடம் பிரார்த்தனை வைக்கிறார். ஆம்,வாழ்க்கையில் எது நல்லது? எது தீயது? யார் நல்லவர்? எவர் தீயவர்? என்று புரிந்து கொள்வதி லேயே பெரும்பான்மைப் பொழுதுகள் குழப்பத்திலேயே கழிந்து விடுகின்றன. பின்னர் நல்ல வாழ்க்கையை எல்லோரும் போற்றும்படி வாழ்வது எப்படி?.

கற்றறிந்த மேதைகளும் வாழ்ந்து அனுபவப்பட்ட பெரியவர்களும் வாழ்வியலில் சிலவற்றை நல்லவை என்றும் சிலவற்றைத் தீயவை என்றும் வகைப்படுத்தி வைத்திருக்கின்றனர். அவர்களின் மதிப்பீடுகளின் வழி தீயவற்றை விலக்கி, நல்லவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், அறம் சார்ந்த எண்ணங்களோடு ஒழுக்கம் சார்ந்த வாழ்க்கையை நம்மாலும் வாழ முடியும். தீயவற்றை விலக்கக் கற்றுக் கொண்டாலே, அல்லவை தேயத் தொடங்கினாலே, அறம் பெருகிடும் என்கிறார் வள்ளுவர்.

ஒரு பொருளையோ அல்லது ஒரு செயலையோ எப்படி நல்லது என்றும் தீயது என்றும் பகுத்துக் காண்பது? சில விஷயங்கள் அந்தப் பொருள் அளவிலேயே நல்லவையாக இருக்கும். சில கையாளப்படும் தன்மைகளைப் பொறுத்து நன்மைகளை விளைவிப்பனவாக அமைந்து விடும். எளிதாக அவற்றை நல்லவை என்று ஏற்றுக் கொள்ளலாம். சில, நன்மைக் குணம் சார்ந்தவையாக இருந்தாலும் அவை சிலருக்கோ சில நேர்வுகளுக்கேற்ப நலம் பயக்காதவையாகவும் அமைந்துவிடும். உதாரணத்துக்குத் தேனை எடுத்துக்கொள்வோம். தேன் உடம்புக்கு நல்ல மருந்தாகவும் உணவாகவும் அமையக்கூடியதுதான். ஆனால், நீரிழிவு நோயாளிகளுக்கோ அது தீமையை விளைவிக்கும் எனும்போது நன்மைக்குணம் எதிர்முகத் தன்மையதாக மாறிப்போகிறது.

சிலமனிதர்களை ஆளைப்பார்த்து, நிறத்தைப் பார்த்து, வசதி வாய்ப்புகளைப் பார்த்து நல்லவ ரென்றோ தீயவரென்றோ திடீர் முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கிறார் திருவள்ளுவர்.

"கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன
வினைபடுபாலால் கொளல்"

நேராக இருப்பதெல்லாம் நேர்மையானதாக இருக்கும் என்பதில்லை. வில்லில் இருந்து புறப்பட்டு குறிநோக்கி வந்து உயிர்களைக் கொல்லும் அம்பு நேரானதாகத்தான் உள்ளது. ஆனால், அது நேர்மையானது கிடையாது. ஆட்களைக் கொல்லும் நேர்மையற்ற செயலுக்கு அது துணை போகிறது. கோணல்மாணலாக வளைந்திருப்பதெல்லாம் குதர்க்கமாகவே செயற்படுமென்றில்லை. வளைந்திருக்கும் யாழ் எனும் இசைக் கருவியில் இருந்து புறப்பட்டு வருகிற இசை மனித இதயங்களை நேர்பண்ணுகிற இசைமருத்துவத்தைச் செய்துவிடுகிறது. எனவே, ஆட்களை விட அவர்களின் செயல்களை வைத்தே நல்லது கெட்டது தீர்மானிக்கப்பட வேண்டுமென்கிறார் வள்ளுவர்.

பொதுவாகவே கருவிகளில் நல்லது கெட்டது பார்த்து ஒதுக்குவதைவிட அவற்றின் மூலம் விளையும் நன்மைத் தீமைகளைக் கணக்கில் கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். சமையல் கூடத்தில் பயன்படுத்தப்படும் கத்தியும் கசாப்புக்கடையில் பயன்படுத்தப்படும் கத்தியும் அடிப்படையில் கத்திதான். என்றாலும், அவற்றினால் விளையும் பயனைப் பொறுத்து அவற்றுக்கு நல்லது கெட்டது முத்திரை குத்தலாம். இன்னும் ஒருபடி மேலேபோய், மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்காக மருத்துவர்கள் கரங்களிலே உயிர்காக்கும் நோக்கோடு அமர்ந்திருக்கிற கத்தியை எந்த முத்திரை குத்தி நாம் ஆராதிக்கப் போகிறோம்? ஆக, நன்மை தீமை என்பது கருவிகளில் இல்லை. கையாளும் மனிதர்களைப் பொறுத்தும் கையாளும் சூழல்கள் மற்றும் நோக்கங்களைப் பொறுத்தும் அவை நல்லவையா, தீயவையா? என்று தீர்மானிக் கப்படுகின்றன.

மனிதர்கள் வாழ்க்கைக்குப் பயன்படுகிற பணம்கூட ஒரு கருவிதான். பணம் நல்லதா கெட்டதா என்று கேட்டால், காலங்காலமாக ஞானிகளும் துறவிகளும் பணம் தீயது என்றுதான் கூறியிருக்கிறார்கள். பணம் தீராத ஆசையைப் பெருக்கும். ஆசை வேண்டாத செயல்களையெல்லாம் பணம் ஈட்டுவதற்குச் செய்யத் தூண்டுமென்று பணத்தை ஒதுக்கக் காரணம் கற்பிப்பர் தத்துவவாதிகள். ஆனாலும், பணம் நல்லது என்கிறார் உலகப்பொதுமறை தந்த வள்ளுவப் பெருந்தகை. வாழ்வில் எவ்வளவு பெரிய பகைவர்களையும் அவர்களின் ஆணவம் அடக்கிப் பணியவைக்கப் பணம் அவசியம் தேவை என்கிறார். மேலும் செய்க பொருளை! என்று கட்டளையிடவும் செய்கிறார்.

ஒருவருடைய கண்ணோட்டத்தில் நல்லதாகத் தெரிவது, மற்றொருவர் கண்ணோட்டத்தில் தீயதாகத் தோன்றலாம். தெருக்களில் வண்ண ஓவியங்களைப் பிரமாண்டமாக வரைந்து பரிசாகக் காசுபணம் பெறுவதென்பது தெரு ஓவியருக்கு நல்லதாகத் தெரியலாம். ஆனால், அந்த வீதிகளில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கோ அல்லது போக்குவரத்துக் காவலர்களுக்கோ அது தீயதாகத் தோன்றும். சட்டப்படி அது குற்றமாகவும் கூறப்படும். வனங்களில் முளைத்துக்கிடக்கும் புல்வெளிகளைப் பார்த்து, வன விலங்குகளில் ''உங்களது கண்ணோட்டத்தில் நல்லவர் யார்? தீயவர் யார்? - என்று கேட்கப்பட்டது. புற்கள் தந்த பதில் நம்மைச் சிலிர்க்க வைத்துவிடும். "எங்களைப் பொறுத்த வரை சிங்கம் புலி கரடி போன்றவை நல்ல விலங்குகள். ஆடு, மாடு போன்றவை கொடிய விலங்குகள்" - என்றன புற்கள். புற்களைப் பொறுத்தவரை தங்களைத் தொந்தரவு பண்ணாத, தங்களை உண்ணாத எல்லாமிருகங்களும் நல்ல விலங்குகள். அவை மனிதர்கள் முதலான மற்ற எல்லா உயிர்களையும் அச்சுறுத்துகிற சிங்கம் புலியாக இருந்தாலும். தங்களை உண்ணுகிற ஆடுகளும் மாடுகளும் கொடிய விலங்குகளாம். எப்படி இருக்கிறது பாருங்கள் கணிப்பு.

நல்லது தீயது தீர்மானிப்பதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான கருத்துகள் உள்ளன. ஒரு பாடசாலை வகுப்பறைக்கு ஐந்து ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த வகுப்பறையில் யார் சிறந்த நல்ல மாணவன் என்று கேட்டுப்பார்த்தால், ஐந்துபேரும் ஐந்து மாணவர்களின் பெயர்களைக் கூறி அதற்கான பதில்களை அவரவர் கணிப்பில் விளக்கவும் செய்வார்கள். வகுப்பிலேயே முதல் மதிப்பெண் எடுக்கக்கூடிய மாணவன், நேரந்தவறா மல், விடுப்பும் எடுக்காமல் நாள்தோறும் வகுப்புக்கு வரும் மாணவன், பொய்சொல்லாமல் ஒழுக்கமாக - பணிவாக உள்ள மாணவன், வகுப்பாசிரியருக்கு உதவிசெய்து வகுப்பை அமைதியாகப் பார்த்துக் கொள்ளும் மாணவன், விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பிடிக்கும் மாணவன். இந்தப் பட்டியலில் உண்மையில் எந்த மாணவனை நல்ல மாணவன் கணக்கில் சேர்த்துக் கொள்வது? ஒவ்வொரு நோக்கத்தில் ஒவ்வொரு மாணவனும் நல்லவனாக இருக்கிறானே!.

"நெஞ்சத்து நல்லம்யாம்
என்னும் நடுவு நிலைமையால்!"

என்கிற நாலடியார் இலக்கிய வரி, நெஞ்சத்தால் நடுநிலைமை தவறாமல் நல்லது கெட்டது பார்க்கும் தன்மை ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்கிறது. நடுக்கடலில் உருவாகும் புயல், ஒருபக்கம் கரையைக் கடக்கும் பகுதிகளில் பெரும் சேதத்தை உண்டுபண்ணிவிட்டுப் போகிறது. மற்றொரு பக்கம், பிற பகுதிகளில் பரவலாக மழையைப் பொழியச் செய்து நன்மை செய்துவிட்டுப் போகிறது. அப்படியானால் புயல் மனிதர்க்கு நன்மையா? தீமையா? கணிக்க முடியாத அளவுக்குப் பட்டிமன்றத் தலைப்புப் போல ஆகிவிடுகிறது. தொடர்ந்து பெய்யும் மழையும் அளவுக்கு அதிகமாக அடிக்கும் வெய்யிலும் மக்களால் சபிக்கவே படுகின்றன. ஆயினும், மழையும் வெய்யிலும் பொதுநிலையில் மக்களுக்கு நன்மைகளைத் தானே செய்கின்றன. நன்மை தீமைகளைத் தனிமனித நோக்கில் பார்க்காமல், சமுதாய ரீதியில் ஏற்படும் பெரும் நன்மைகளைக் கருத்திற்கொண்டு ஒன்றை நல்லது என்கிற முடிவுக்கு வரவேண்டும். அல்லாத பட்சத்தில் தீயது என்று புறந்தள்ளப்பட வேண்டும்.

ஒரு பெரிய ஆழமான ஆறு. பெருக்கெடுத்து, பெரும் ஆற்றலோடு ஓடிக்கொண்டிருக்கிறது. ஆற்றைக்கடந்து அக்கரையில் இருக்கும் ஊர்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், படகுப் போக்குவரத்தில் மட்டுமே சென்றாக வேண்டும். ஒரு பெரிய படகு கிளம்பியது. அதற்குள் எண்ணிக்கையில் அதிகமான இளைஞர் கூட்டமொன்று ஏறியிருந்தது. படகின் ஓரத்தில் சாதுவான ஒரு துறவி அமைதியாக அமர்ந்து கண்களை மூடி மனத்துக்குள் ஜெபதபங்களைச் சொல்லத் தொடங்கியிருந்தார். இளைஞர்கள் அந்தத் துறவியைக் கேலிசெய்து கிண்டல் பண்ணத் தொடங்கினர். மாலை நேரம். இன்னும் கொஞ்ச நேரத்தில் இரவு வந்து விடும். இரவு முழுவதும் அந்தப் படகில்தான் அவர்கள் பயணம் செய்தாக வேண்டும். ஆயினும், இளைஞர்களின் சேட்டைகள் குறைந்தபாடில்லை.கெட்ட வார்த்தைகள் சொல்லித் துறவியைத் திட்டினர். செருப்பால் துறவியின் தலையைத் தொட்டு, அவரைத் தியானம் பண்ண விடாமல் தொந்தரவு பண்ணிக்கொண்டே வந்தனர்.

இரவு நன்றாக வந்து விட்டது. படகு போய்க்கொண்டிருந்தது. அப்போது இருளைக் கிழித்ததுபோல ஒரு மின்னல் வெட்டியது. ஓர் அசரீரி வார்த்தை வானத்தில் இருந்து ஒலித்தது. "என் அன்புக்குரிய துறவியே! சொல்! இப்போது இந்தப் படகை நான் புரட்டிப் போட்டுவிடவா?" அசரீரியின் குரலுக்கு பதில்சொல்லாமல், கண்களை மூடிய தியான நிலையிலேயே துறவி அமர்ந்தி ருந்தார். இதைப் பார்த்து மனந்திரும்பிய இளைஞர்கள் துறவியின் காலடியில் பொத்துபொத்தென்று விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கிடந்தனர். சிறிது நேரத்தில் கண்விழித்து, தவம்கலைத்த துறவி இளைஞர்களைத் தூக்கிவிட்டார். ''அஞ்ச வேண்டாம்''- என்றார். பிறகு வானத்தைப் பார்த்துப் பேசினார், "என் அன்பான தெய்வமே! நீ ஏன் திடீரென்று படகைப் புரட்டவா? என்று சாத்தானின் குரலில் பேசினாய்? நீ புரட்ட வேண்டியது இளைஞர்களின் மனத்தை அல்லவா?" - என்று கேட்டார்.


"அது சாத்தானின் குரல்தான். நீ புரிந்து கொண்டாய்! அதனால் விபரீதம் எதுவும் நடக்கவில்லை; நன்மையே நடந்தது. எவன் சாத்தா னின் குரலைப் புரிந்துகொண்டு அதற்குச் செவிசாய்க்காமல் இருக்கி றானோ, அவனே தெய்வத்தைப் புரிந்து கொள்வான்!" - என்றது தெய்வத்தின் அசரீரி. ஆம்! நல்லது போலவே பல தீயவைகள் நாட்டில் உள்ளன. தீயது போலவே பல நல்லதுகளும் நாட்டில் உள்ளன. பொது நோக்கில் சமுதாய நன்மைகள் விளைவிக்கும் நல்லவைகளை ஏற்றுக்கொண்டு, தீயவைகளை விலக்கி வாழ்வோம்.

**சுந்தர ஆவுடையப்பன்**

**நன்றி – மாலைமலர்**

## தவக்கால சிந்தனை

### இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார்



இயேசுவின் மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள்முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?" – என்று கேட்டார். யூதர்கள் மறுமொழியாக, "நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில், மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்" – என்றார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து, " 'நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன்' என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா? கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை 'இறைமகன்' என்று சொல்லிக் கொண்டதற்காக 'இறைவனைப் பழித்துரைக்கிறாய்' என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்பவேண்டாம். ஆனால், நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்; அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்" என்றார். இதைக் கேட்டு அவர்கள் அவரை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆனால், அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார். யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்கு தங்கினார். பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், "யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை; ஆனால் அவர் இவரைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று" எனப் பேசிக்கொண்டனர். அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

## இன்றைய நாளில்...

- 1829 – கொழும்பு, புறக்கோட்டை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1865 – ஆபிரகாம் லிங்கன் தனது கடைசி உரையை நிகழ்த்தினார்.
- 1905 – ஐன்ஸ்டீன் தனது சார்புக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 2006 – ஈரானிடம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்பதாக ஈரான் ஜனாதிபதி மகுமூத் அகமதி நெச்சாத் அறிவித்தார்.
- 2012 – இந்தோனேஷியாவில் சுமத்ரா கடற்பகுதியில் 8.7 ரிச்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன்போது இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

தேர்தலும் அறிவிக்கப்பட்டி ருக்குது... சித்திரை புதுவருசமும் வந்திட்டுது.. ஆனா மக்கள் மத்தியில் விசேஷம் ஒன்றும் தெரியாமல் இருக்குது... இதுதான் சிஸ்டம் சேஞ்சோ?



# இலங்கை – இந்திய உடன்படிக்கையை குழப்பும் சீனாவின் அடிவருடிகளை எதிர்த்து நிற்போம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கையுடன் இந்தியா செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகள் சரியானவையே. இதனை குழப்புவதற்கு சீனாவின் அடிவருடிகள் முயற்சிப்பார்களாக இருந்தால் அதனை எதிர்த்து நிற்போம் என்பதுடன், வடக்கு - கிழக்கில் சீனாவின் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க மாட்டோம் என்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரதப் பிரதமர் இங்கு வந்தார். இதன்போது பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த விடயம் சீனாவுக்கு வலிக்கும் என்றும் அமெரிக்காவுக்கு வலிக்கும் என்றும் இங்கே பலர் கதைக்கின்றனர். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் இலங்கையை மேலே கொண்டு வருவதற்கான முயற்சியை முதலில் செய்தது இந்தியாவே. இதுவே பக்கத்து நாடு. இந்த ஒப்பந்தங்கள் சரியானவை என்றே கூற வேண்டும்.

இந்நிலையில், சீனாவின் அனுசரணையில், சீனாவின் அடிவருடிகள் இந்த விடயத்தில் குழப்ப நினைத்தால் நாங்கள் நிச்சயமாக அதனை எதிர்த்து நிற்போம். அதேபோன்று வடக்கு, கிழக்கில் சீனாவின் எந்த நடவடிக்கையும் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என்றார்.

# நுவரெலியா காயத்ரி பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள 108 பாணலிங்கங்களுக்கான மகா கும்பாபிஷேகம்









**(நுவரெலியா நிருபர்)**

நுவரெலியா காயத்ரி பீடத்தில் அமைக்கப் பட்டுள்ள 108 பாண லிங்கங்களுக்கான கும்பாபிஷேகம் நேற்று (10) நடைபெற்றது.

கும்பாபிஷேக நிகழ்வுகள் அறங்காவலர் சபை நிர்வாகி சக்திவேல் சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது.

பூஜை நிகழ்வுகள் பிரதிஸ்டா பிரதம குரு குருதாச மணி சிவஸ்ரீ இரா.சண்முக சுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றதுடன், ஆலய பிரதம குரு பரத்வாஜ தத்புருஷ சிவாச்சாரியார் சிவாகம கிரியா ஜோதி யோகராஜ கோமகன் குருக்கள் உட்பட பலருடைய பங்களிப்புடனும் பூஜைகள் நடைபெற்று சுப வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று அடியார்களுக்கு பிரசாதமும் வழங்கப்பட்டது.

# இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச் சங்க தலைவராக அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவு





பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவராக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் செவ்வாய்க்கிழமை(08) பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி தலைமையில் பாராளுமன் றத்தில் நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது. இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் (கலாநிதி) சிறி வோல்ட் இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த ஹெட்டியாரச்சி தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, 1956ஆம் ஆண்டு முதல் சுவிட்ஸர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளை இங்கு நினைவுகூர்ந்தார். விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இரு நாட்டுக்குமிடையில் வலுவான அபிவிருத்தி ஒத்துழைப்புகள் காணப்படுவதாகவும் சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மீட்புப் பணிகளில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கொவிட் -19 தொற்றுநோய் காலப் பகுதியில் சுவிட்ஸர்லாந்து இலங்கைக்கு வழங்கிய உதவிகளை இங்கு வலியுறுத்திய பிரதி சபாநாயகர், இரு நாட்டுக்குமிடையில் காணப்படும் பொருளாதார உறவுகள் உள்ளிட்ட ஒத்துழைப்புகள் மேலும் விஸ்தரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறினார். இரு நாட்டுப் பாராளுமன்றங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் மற்றும் நட்புறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இந்த நட்புறவுச் சங்கம் சிறந்ததொரு தளமாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதில் இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் முக்கியத்துவத்தை இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் வலியுறுத்தினார். மேலும், பொருளாதார அபிவிருத்தி, வர்த்தகம் மற்றும் பாராளுமன்ற பரிமாற்றம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதில் சுவிட்ஸர்லாந்து அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நட்புறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்ட அமைச்சர் உபாலி பன்னிலகே இங்கு கருத்துத் தெரிவிக்கையில், ‘‘நல்லிணக்கம், சமாதானத்தைக் கட்டியெழுப்புவது உள்ளடங்கலான அபிவிருத்தி போன்றவற்றுக்கு சுவிட்ஸர்லாந்து தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார். பொருளாதார மீள்தன்மை, பசுமையான கண்டுபிடிப்புகள், தொழில் பயிற்சி, டிஜிட்டல் இணைப்பு மற்றும் சுற்றுலா மேம்பாடு போன்ற துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர தொழில்நுட்ப பரிமாற்றங்களை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# மன்னாரில் உணவகங்களில் திடீர் சோதனை

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அதிரடி நடவடிக்கை





**(மன்னார் நிருபர்)**

மன்னார் - பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக நேற்று முன்தினம் (09) மன்னார் நகர பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அவற்றில் ஒரு உணவகம் தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக, மன்னார் உப்புக்குளம் - பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த இரு உணவகங்களுக்கும் திடீரெனச் சென்ற மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அப்பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் குறித்த குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது குறித்த உணவகத்தில் கடமையாற்றியவர்கள் சுகாதார பரிசோதனை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் கடமையாற்றியமை, குளிர்சாதனப் பெட்டியில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை சேகரித்து வைத்தமை, உணவுப் பொருட்களை சுகாதாரம் இன்றி பாதுகாப்பற்ற முறையில் தயாரித்தமை உள்ளிட்ட சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, உடனடியாக குறித்த குறைபாடுகளை நிவர்த்திசெய்ய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும், அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டபோது அந்த உணவகத்தில் பல்வேறு பிரச்சினைகள் சுகாதார அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த உணவகத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்தல், உரிய முறையில் கழிவு நீர் வடிகான் பராமரிக்கப்படாமை, கழிவுநீர் தொட்டியில் நுளம்பு பெருகும் வகையில் வைத்திருந்தமை உள்ளடங்களாக பாரிய சுகாதார சீர்கேடுகளுடன் குறித்த உணவகம் இயங்கி வந்தமை அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த உணவகம் தற்காலிகமாக சீல் வைத்து மூடப்பட்டுள்ளதோடு உணவக உரிமையாளருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களையொட்டி மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள உணவகங்களில் தொடர்ச்சியாக திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் சுகாதார முறையில் உணவுப் பொருட்களை கையாளும் உணவகங்களில் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதாரத் துறையினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதோடு, சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை கையாளும் உணவகங்கள் தொடர்பாக முறையிடுமாறும் சுகாதாரத்துறையினர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாழ்க்கைப் பாடம்

**ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்**

## இறைவனுக்கு என்றும் நன்றி சொல்வோம்!

***ஒரு மனிதர் இருந்தார். அவர் கண்பார்வையை இழந்தவர்; கை, கால் இரண்டும் ஊனமுற்றவர். இந் நிலையிலிருந்த அவர் உணர்வுபூர்வமாக அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறி அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்தார். இதனைப் பார்த்த மற்றொருவர், ‘‘என்ன இது? உமக்கோ கண் பார்வையில்லை; கைகள் இல்லை; கால்களும் இல்லை. நீர் முடமாகக் கிடக்கின்றீர். அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லி அவனைப் புகழ உம்மிடம் என்னதான் இருக்கின்றது” எனக்கேட்டார். அதற்கு அந்த மனிதரோ,***

***“என்னிடம் என்ன இருக்கின்றதா?!***

***அவனுக்கு நன்றி சொல்ல எனக்கு ஒரு நா இருக்கின்றது; அவனை அஞ்சிப் பயப்பட ஓர் இதயம் இருக்கின்றது; சோதனைகளுக்கு முன்னால் பொறுமை காக்க ஓர் உடல் இருக்கின்றது. இவற்றுக்காக அவனுக்கு நான் நன்றி சொல்லாமல் இருக்க முடியுமா” எனக் கூறினார்.***

***இந்த மனிதரே அல்லாஹ்வைப் புகழ்கின்றார்; அவனுக்கு நன்றி பாராட்டுகின்றார் என்றிருந்தால் நானும் நீங்களும் எந்தளவு தூரம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.***

***முன், பின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்ட ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இரவெல்லாம் கால் வீங்கும் அளவுக்கு நின்று வணங்குவார்கள் என்றால் எதற்காக?***

***அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.***

***“நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஓர் அடியானாக இருக்க வேண்டாமா?***

***என்பார்கள் நபியவர்கள்.***

***அல்லாஹ்வின் அருள்களையும் அருட்கொடைகளையும் மேலும் மேலும் நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?***

***அதற்கான சிறந்த வழி அல்லாஹ்வுக்கு அதிகமதிகம் நன்றி செலுத்துவதுதான்.***

***அல்லாஹ் சொல்கின்றான்:***

***“நீங்கள் (எனக்கு வழிபடுவதன் மூலம்) எனக்கு நன்றி செலுத்தினால் நான் எனது அருட்கொடைகளை மேலும் உங்களுக்கு அதிகரித்துத் தருவேன்” (ஸூறா இப்றாஹீம்:07)***

***அல்லாஹ் தனது அடியார்கள் தனக்கு நன்றி பாராட்டுபவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றான்.***

***அல்லாஹ் கூறுகிறான்:***

***“ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூறுங்கள்; நானும் உங்களை நினைவு கூறுவேன். இன்னும் நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்; எனக்கு மாறு செய்யாதீர்கள்.”***

***அல்லாஹ் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை விழித்து சொல்கின்றான்:***

***“மேலும் நீர் நன்றி செலுத்துபவர்களில் ஒருவராக இருப்பீராக.”***

***இதே விஷயத்தை நபி மூஸாவைப் பார்த்தும் சொல்லுகின்றான்.***

***முஃமீன்களுக்கும் இதே கட்டளையை பிறப்பிக்கின்றான்:***

***“நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்; நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்.”***

***அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான முறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.***

***முதலாவதாக அல்லாஹ் நம்மீது சொறிந்துள்ள அருட்கொடைகளை உள்ளத்தால் ஏற்க வேண்டும்.***

***அவற்றைப் பற்றி வெளிப்படையாக பேச வேண்டும். அவற்றுக்காக அல்லாஹ்வை வாய் விட்டு புகழ வேண்டும்.***

***அவன் அருளிய நிஃமத்துக்களை அவனுக்கு வழிபடும் விஷயங்களில் பயன்படுத்த வேண்டும்.***

***இவை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான வழிகள்.***

***அதிகாலையில் கண்விழித்தவுடன் தூக்கத்தின் மூலம் நம்மை மரணிக்கச் செய்து மீண்டும் விழிக்கச் செய்து நமக்கு உயிரளித்த அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி சொல்கின்றோம்.***

***தொழுகை உட்பட நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் அமைந்தவைதான்.***

***அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர் பெறும் நன்மைகள் பல.***

***ஆரம்பமாக ஷுக்ர் முஃமினின் அடிப்படையான ஒரு பண்பு.***

***அது அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கான சிறந்த வழி.***

***அவனது அருட்கொடைகளை மேலும் மேலும் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியும் கூட.***

***ஈருலகிலும் அல்லாஹ்வுடைய தண்டனைகளிலிருந்தும் தப்பிக் கொள்ளவும் மறுமையில் நிறைவான நற்கூலியைப் பெற்றுக் கொள்ளவும் அவனுக்கு நன்றி செலுத்தி வாழ்வது உதவும்.***

***நன்றியுள்ள நல்லடியார்களாக வாழ்வோம்; நலம் பெறுவோம்!***

# வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் மக்கள் காணிகளில் எல்லைக்கற்கள் இடும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



வன இலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் மக்கள் காணிகளில் எல்லை கற்கள் இடும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் மற்றும் காணி ஆகிய அமைச்சுகளின் பிரதி அமைச்சர்களின் இணைத் தலைமையில் வன இலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்கலந்துரையாடலில் மக்களது காணியில் எல்லைக் கற்கள் இடுதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எமது வடமாகாணத்தில் கூடுதலான பிரதேசங்கள் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் ஊடாக அளவீடு செய்யப்பட்டு கடந்த கால அரசாங்கங்களினுடைய வர்த்தமானியின் பிரகாரம் அளவீடுகள் இடம்பெறுவதால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். குறித்த திணைக்களங்களில் பணிபுரியும் கீழ்மட்ட சில அதிகாரிகள் மக்களது காணிகளை அவர்களது நிலைமையை கருத்திற்கொள்ளாது அடாத்தாக செயற்படுவது தொடர்பிலும் சுட்டிக்காட்டினோம்.

எனவே, அதை நிவர்த்திசெய்யும் முகமாக காத்திரமான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது, எதிர்வரும் காலங்களில் கற்களை இடும் பணியை தற்காலிகமாக நிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், பிரதேசவாசிகள் ஆகியோரின் ஆலோசனையுடன் மீண்டும் அளவிடும் பணியை செய்ய வலியுறுத்தப்பட்டதுடன், அரசாங்க அதிபர்களால கோரிக்கை முன்வைக்கப்படும் மக்களது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் காத்திரமான கலந்துரையாடல்கள் பல்வேறு தரப்பினரையும் உள்வாங்கி இடம்பெறும். எதிர்காலத்தில் ஜனாதிபதி தலைமையில் வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களையும் உள்ளடக்கி நிரந்தரத் தீர்வைக் காண முடிவு எடுக்கப்பட வேண்டும் என தீர்மானித்தோம். வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றுடன் தொடர்புடைய காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க காத்திரமான நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதன் மூலம் காணி வழங்குதல் மற்றும் காணிப்பிரச்சினை தொடர்பாக காத்திரமான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மீன்பிடி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வடக்கு அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# டீப்சீக் ஒரு மாற்றுத் தயாரிப்பு மட்டும்தானா?

அருண் அசோகன்

2025 ஜனவரி மாதம் செயற்கை நுண்ணறிவுத் துறையின் (ஏ.ஐ.) நெடும்பரப்பில் 'புராஜெக்ட் ஸ்டார்கேட்' (PROJECT STARGATE) என்னும் அறிவிப்பு வெளியானது. அமெரிக்காவின் தொழில்நுட்ப வல்லமையை உலகுக்கு அறிவிக்கும் வண்ணம் இருந்தது அந்த அறிவிப்பு.

சாட்ஜிபிடி செயலியை உருவாக்கிய ஓபன் ஏ.ஐ. நிறுவனம், ஆரக்கிள், சாஃப்ட்பேங், எம்.ஜி.எக்ஸ். ஆகிய தனியார் பெருநிறுவனங்கள் மேற்கொண்டுள்ள ஒரு கூட்டு முன்னெடுப்புதான் இந்தத் திட்டம். அடுத்த நான்கு ஆண்டுகளில் ஏ.ஐ. கட்டமைப்புகளில் 500 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் உருவாகியுள்ளது.

**ஸ்டார்கேட் - டீப்சீக் மோதல்:**

ஏ.ஐ. துறையில் அமெரிக்கா அதன் மேலதிகாரத்தை நிறுவுவதற்குப் பெரும் விருப்பம் கொண்டிருப்பதை இந்த அறிவிப்பும் வெளிப்படுத்தியது. இந்தத் திட்டத்தை அமெரிக்காவின் தொழில்நுட்பத் தலைமைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று கூறுகிறார்.இந்தத் திட்டத்தின் அரசியல் முகமாக இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். ஸ்டார்கேட் திட்டம் அறிவிப்பு வெளியான ஒரே வாரத்தில் வெளியான மற்றொரு செய்தி அந்தத் திட்டத்தின் மீது ஒரு பேரிடியாக வந்து இறங்கியது.

குறைந்த முதலீட்டில், அசல் மூலக் குறியீடு இலவசமாகக் கிடைக்கக்கூடிய முறையில் (ஓபன் சோர்ஸ்) உருவாக்கப்பட்ட ஏ.ஐ. செயலியான டீப்சீக் (DeepSeek), ஓபன் ஏ.ஐ. நிறுவனத்தின் சாட்ஜிபிடி செயலியைக் காட்டிலும் அதிகமாகப் பதிவிறக்கம் செய்யப்பட்டது. ஏ.ஐ. துறையில் 'பிரம்மாண்ட முதலீடு', 'வேலைவாய்ப்பு உருவாக்கம்' என்று அமெரிக்கா கட்டமைத்த பெரும் பிம்பத்தையும் அதன் தொழில்நுட்பச் செயற்றிறமின்மையையும் டீப்சீக்கின் பாய்ச்சல் அம்பலப்படுத்தியதுடன், அது போன்ற பெரும் முதலீடு தேவைதானா என்கிற அடிப்படைக் கேள்வியையும் உலக அரங்கில் முன்வைத்தது.

இதன் விளைவாக, முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்தனர்; உலக பங்குச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. என்விடியா (NVIDIA) நிறுவனத்தின் சந்தை மதிப்பு ஒரேநாளில் (2025 ஜனவரி 27) சுமார் 600 பில்லியன் டொலர் அளவுக்குச் சரிந்தது. சில பெருநிறுவனங்கள் மட்டுமே எதிர்கொண்ட சவால் அல்ல இந்தச் சரிவு.

அமெரிக்கா, சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகப் போர் என்றும் இதனைச் சுருக்கிவிட முடியாது. இலாபம், ஏகபோக உரிமை, அதிகாரம், கட்டுப்பாடு ஆகிய காரணிகளால் நமது இன்றைய பொருளாதார முறை எவ்வாறு இயக்கப்படுகிறது என்பதைத்தான் இந்த ஸ்டார்கேட் - டீப்சீக் மோதல் அத்தியாயமும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**டீப்சீக் வெற்றியின் சூட்சுமம்:**

எதிர்கொண்ட சவால்களையெல்லாம் வெற்றிக்கான படிக்கற்களாக டீப்சீக் நிறுவனம் மாற்றிக்கொண்டது. செயற்கை நுண்ணறிவுத் துறையில் இயந்திரங்கள் தயாரிப்புக்கு அவசியமான வன்பொருள் (Hardware) உற்பத்தியில் என்விடியா நிறுவனம் முன்னணியில் இருக்கிறது. அந்நிறுவனத்தின் H800 செயலாக்க அலகுகள் (Graphics Processing Units) கூட ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளுடன்தான் சீனாவுக்கு விற்கப்படுகின்றன. இதுபோன்ற செயலாக்க அலகுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தொழில்நுட்பப் பின்னடைவுகளிலிருந்து மீண்டெழவேண்டிய கட்டாயம் டீப்சீக் நிறுவனத்துக்கு ஏற்பட்டது.

தொழில்நுட்ப ரீதியாகப் பல அசாதாரண தீர்வுகளை கணினி அமைப்புகளைக் (Mixture of Experts Architecture, Multi-head latent attention) கொண்டு, டீப்சீக் நிறுவனம் அதன் மாதிரிகளை (Models) அதிகச் செயற்றிறன் மிக்கவையாக வடிவமைத்தது; குறைந்த செலவில் அதிகமான செயற்றிறன் என்னும் இலக்கை எட்டிப் பிடித்தது. ஓபன் ஏ.ஐ. போன்ற பெருநிறுவனங்கள் நிர்ணயித்த விலையைக் காட்டிலும் பன்மடங்கு குறைந்த விலையில், அதேவேளை, மிக அதிகமான செயற்றிறன் கொண்ட ஏ.ஐ. மாதிரிகளை டீப்சீக் நிறுவனம் தயாரித்து, தொழிற்றுறைப் பயன்பாட்டுக்கும் வழங்கத் தொடங்கியது.

ஓபன் சோர்ஸ் முறையில் உருவாக்கப்பட்ட இதுபோன்ற ஏ.ஐ. மாதிரிகள், இந்தத் துறையில் பெரும் செல்வாக்குடன் திகழும் பெருநிறுவனங்கள் நிர்ணயித்த விலை - செயற்றிறன் அளவீடுகளுக்கு மிகப்பெரும் சவாலாக எழுந்தன. அதுமட்டுமன்றி, ஒரு மென்பொருள் (Software) மற்றொரு மென்பொருளுடன் தொடர்புகொள்வதற்கான ஒருங்கிணைப்புக் குறியீடுகளை (Application Programming Interface) டீப்சீக் மிகக் குறைந்த செலவில் வழங்கியது.

இதன் விளைவாக, தெற்குலக நாடுகளும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் இயங்கிவரும் சிறிய நிறுவனங்களும் 'அமெரிக்கச் சார்புநிலை' என்னும் நிலையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முடியுமென்கிற புதிய சூழலை டீப்சீக் உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாபெரும் மூலதனப் பாய்ச்சலை (Massive Capital Inflow) நியாயப்படுத்திய பொருளாதார வாதங்களை எல்லாம் தகர்த்தெறிந்த டீப்சீக், செயற்கை நுண்ணறிவுத் துறையில் பலரும் பங்கேற்கலாம் என்கிற சாத்தியக்கூறையும் அறிமுகப்படுத்தியுள்ளது. செயற்கை நுண்ணறிவுத் துறையில் நிலவும் ஏகபோக உரிமை, கட்டுப்பாடுகள் என்னும் கோட்டைக்குள் டீப்சீக் என்னும் ஜனநாயக மின்னல்கீற்று ஒரு மகத்தான அதிர்வலையைத் தோற்றுவித்துள்ளது என்றே கூறலாம்.

**டீப்சீக் எதிர்கொள்ளும் சவால்:**

டீப்சீக்கின் ஓபன் சோர்ஸ் புரட்சி என்பது தொழில்நுட்பத் துறையில் இயங்கிவரும் பெருநிறுவனங்களுக்கு ஒரு சிக்கலான பிரச்சினை மட்டுமல்ல, ஏகபோகம், இலாப வேட்கை, தேவையற்ற நுகர்வு ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்டிருக்கும் ஏ.ஐ. நெடும்பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அவசியமான அதிர்வலையாகும். மிகக் குறைந்த விலையில் ஏ.ஐ. கருவிகளை வழங்குவதன் மூலம், பெருநிறுவனங்களின் ஆதிக்கத்தை முன்னிறுத்தும் பொருளாதாரத் தர்க்கத்தை டீப்சீக் தகர்த்தெறிகிறது. மேலும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடித்தளங்கள் குறித்த மாற்றுச் சிந்தனைகளை முன்வைக்கிறது.

செயற்கை நுண்ணறிவுத் துறையின் அடிப்படைக் கட்டமைப்பு, அதன் பலவீனங்கள், முரண்பாடுகள், சாத்தியமான மாற்றங்கள் பற்றி ஆராய்ந்து, விமர்சன ரீதியாக உரையாடல்களை மேற்கொள்வதற்கான தளங்களை டீப்சீக் உருவாக்கியிருக்கிறது.

தற்போதைய சர்வதேச பொருளாதார அடித்தளத்தையே அதிரவைத்த டீப்சீக் செயலி, பெரும் சைபர் தாக்குதலுக்கும் உள்ளாகிவருகிறது. எனவே, டீப்சீக்கை வெறுமனே ஒரு மாற்றுத் தயாரிப்பு என்று கருதி நாம் கடந்துவிட முடியாது.

சந்தையின் உள்முரண்பாடுகளை, அவற்றின் பலவீனங்களை எதிர்கொள்ள சந்தை சக்திகளையே உந்தித்தள்ளும் ஆற்றல்கொண்ட ஓர் அதிர்வலையாக டீப்சீக் திகழ்கிறது. 'முதலாளித்துவ முரண்பாடுகளிலிருந்தே முதலாளித்துவ நெருக்கடி உருவாகிறது' என்கிற கார்ல் மார்க்ஸின் கருத்தையும் டீப்சீக் அத்தியாயம் நமக்கு நினைவூட்டுகிறது. இதுநாள்வரையில் தொழில்நுட்பத் துறையின் எதிர்காலத்தைத் தங்கள் பிடிக்குள் வைத்திருந்த பெருநிறுவனங்களும் ஏகபோக சக்திகளும் கட்டவிழ்த்துவிடும் தாக்குதல்களையும் சவால்களையும் டீப்சீக் எவ்வாறு எதிர்கொள்ளவிருக்கிறது என்கிற கேள்விக்குக் காலம்தான் பதில் கூற முடியும்.

# ஏபிளாஸ்டிக் அனீமியா - அச்சம் வேண்டாம்

இரத்தம் சார்ந்த நோய்களில் 'ஏபிளாஸ்டிக் அனீமியா' என்பது அரிதானதாகவும் தீவிரமிக்கதாகவும் இருக்கிறது. மனித உடலில் கல்லீரல், மூளை, இதயம், தோல், சிறுநீரகங்கள், நுரையீரல் உள்ளிட்ட அனைத்து முக்கிய உறுப்புகளையும் விட முக்கியமான உறுப்பு இரத்தமாகும்.

இரத்தம் ஓர் உறுப்பா? ஆம், பல்வேறு உறுப்புகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள், ஒக்சிஜன் உள்ளிட்டவற்றைச் சுமந்து நாள்தோறும் களைப்பில்லாமல் இரத்த நாளங்களில் ஓடிக் கொண்டுபோய் சேர்க்கும் நமது இரத்தமும் ஓர் உறுப்பாகும்.

**மூன்று வகை அணுக்கள்**

இரத்தத்தில் வெள்ளை அணுக்கள், சிவப்பு அணுக்கள், தட்டணுக்கள் ஆகிய மூன்று வகை அணுக்கள் உள்ளன. இவற்றில் வெள்ளை அணுக்கள், நமது உடலுக்குள் வரும் எதிரிகளான கிருமிகள் / விஷமிகள் போன்றவற்றுடன் தொடர்ந்து போர்புரிந்து போராடும் இராணுவ வீரர்கள். சிவப்பு அணுக்கள் நமது இரத்தத்திலுள்ள ஒக்சிஜனையும் ஊட்டச்சத்தையும் மூளை உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் செல்களுக்கும் எடுத்துச்செல்லும் பணியைச் செய்கின்றன. தட்டணுக்கள் இரத்த உறைதலில் பங்காற்றுகின்றன.

இந்த மூன்று வகை செல்களும் நமது எலும்புகளின் உள்ளே உள்ள மஜ்ஜைகளிலிருந்து உண்டாகின்றன. நாம் ஆட்டிறைச்சியைச் சாப்பிடும்போது எலும்பைத் தட்டி உறிஞ்சிச் சாப்பிடுவோம் தானே... அதுதான் 'எலும்பு மஜ்ஜை'. அந்த எலும்பு மஜ்ஜைகளிலிருந்து தோன்றுபவையே இந்த மூன்று வகை செல்களும். ஏபிளாஸ்டிக் அனீமியா என்பது தன்னுடல் தாக்கு நோயாக இருக்கும் வாய்ப்பு அதிகம் என்கின்றன ஆய்வுகள்.


**தன்னுடல் தாக்கு நோய்**

திடீரென ஒருவருக்கு அவரது நோய் எதிர்ப்புச் சக்தியானது அவரது உடல் உறுப்புகளில் ஒன்றையோ பலவற்றையோ குறிவைத்துத் தாக்குதல் நடத்தினால் அதைத் தன்னுடல் தாக்குநோய் (autoimmune disorder) என்று அழைக்கிறோம். அதாவது, இராணுவ வீரர்கள் எதிரியை அழிப்பதோடு தவறுதலாக நம் நாட்டு மக்களையும் சேர்த்து அழித்தால் எப்படி இருக்கும்? அதை நம் உடலின் எதிர்ப்புச் சக்தியோடு பொருத்திப் பார்த்தால், அதுவே ஒட்டோ இம்யூன் நோயாகிறது.

இங்கு ஏபிளாஸ்டிக் அனீமியாவில், நமது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி செல்களான டி-செல்கள், மூன்று வகை இரத்த அணுக்களையும் உருவாக்கும் எலும்பு மஜ்ஜை செல்களை ஒருசேர அழித்தொழிக்கின்றன. இதனால் எலும்பு மஜ்ஜைகளால் இவ்வகை செல்களை உருவாக்க இயலாமல் போகிறது.

எனினும், கண்டறியப்படும் ஏபிளாஸ்டிக் அனீமியாக்களில் மூன்றில் இரண்டுக்கு இதுதான் காரணம் என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. மரபணுக்களும் சுற்றுப்புறக் காரணிகளும் நமது உடலின் எதிர்ப்புச் சக்தியை எலும்பு மஜ்ஜை செல்களுக்கு எதிராகத் தூண்டுகின்றன.

புற்றுநோய்க்குப் பயன்படுத்தப்படும் கீமோதெரபி மருந்துகள், சில வேதிப்பொருட்கள், வைரஸ் தொற்றுகள் ஆகியவற்றால் ஏபிளாஸ்டிக் அனீமியா ஏற்படுவது ஆய்வுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நோய் எந்த வயதினருக்கும் எந்தப் பாலினருக்கும் ஏற்படலாம் என்று அறியப்பட்டாலும் பெண்களைவிட ஆண்களுக்குச் சற்று அதிகமான அளவில் ஏற்படுகிறது.




**அறிகுறிகள்**

சிவப்பு அணுக்கள் குறைவதால் ஹீமோகுளோபினும் குறைந்து உடலின் செல்களுக்கு ஒக்சிஜன் ஊட்டம் சரியாகக் கிடைக்காமல் அயர்ச்சி, சோர்வு, மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. வெள்ளை அணுக்கள் உற்பத்தி குறைவதால் எதிர்ப்புச் சக்தி குறைந்து, இடைவிடாது பக்றீரியா, பூஞ்சைத் தொற்று ஏற்படும்.

இரத்தம் உறைதலுக்கு உதவும் தட்டணுக்கள் குறைபாட்டால் உதிரப்போக்கு, ஈறுகளில் இரத்தக் கசிவு, மூக்கிலிருந்து இரத்தக் கசிவு, வெளுத்துப்போன தோற்றம், இதயத்துடிப்பு சீரற்ற நிலை ஆகியவை ஏற்படும். இரத்தச் செல்களை பரிசோதனைசெய்து பார்த்தால் சிவப்பு, வெள்ளை, தட்டணுக்கள் ஆகிய மூன்றுமே அளவில் மிக மிகக் குறைந்து காணப்படும். இந்நோயை உறுதிப்படுத்த இடுப்பெலும்பு மஜ்ஜை செல்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும்.




**நோயின் வகைகள்**

இந்நோயின் தீவிரத்தன்மையைப் பொறுத்துத் தீவிரமற்ற நோய், தீவிரமான நோய், அதிதீவிரமான நோய் என மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. நோயாளியின் வயது, மரபணுக் காரணிகள், நோயின் தன்மை ஆகியவற்றுடன் பல்வேறு இணைநோய்களையும் பொறுத்து நோய் தீவிரமடைகிறது.

**சிகிச்சைகள்**

ஏபிளாஸ்டிக் அனீமியாவைக் குணப்படுத்தக்கூடிய சிகிச்சை என்பது எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சையாகும். நோயாளியின் மரபணுக்களுடன் ஒத்துப்போகும் ஒருவரிடமிருந்து எலும்பு மஜ்ஜை செல்கள் பெறப்பட்டு அவை நோயாளிக்கு மாற்றம் செய்யப்படும்போது அந்த செல்களை நோயாளியின் உடல் ஏற்றுக்கொண்டால் புதிதாக எலும்பு மஜ்ஜை செல்கள் தோன்றி மூவகை இரத்த செல்களையும் உருவாக்கி அதன்மூலம் நோய் குணமாகிறது. எனினும், இந்தச் சிகிச்சை செய்வதற்கு முன் நோயாளியின் நோய் எதிர்ப்புச் சக்தியை குன்றச் செய்யும் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

இன்னும் எலும்பு மஜ்ஜை மாற்று தள்ளிப் போகும் நிலையில், நோயாளியின் எதிர்ப்புச் சக்தியைத் தீவிரமாகக் குன்றச்செய்யும் 'என்ட்டி தைமோசைட் குளோபுலின் (ATG) மருந்து, சைக்லோஸ்போரின் மருந்துகள் போன்றவை வழங்கப்படுகின்றன. கூடவே, தட்டணுக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் எல்த்ரோம்போபேக் எனும் மருந்தும் வழங்கப்படுகிறது.

ஏபிளாஸ்டிக் அனீமியாவால் பாதிக்கப்பட்டவர்கள் தற்கால நவீன சிகிச்சையால் நோய் நிலையில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றனர். நோய்க்குச் சிகிச்சை பெறும் பட்சத்தில் அந்தச் சிகிச்சை நோயாளிக்கு ஒத்துக்கொள்ளும் நிலையில் சராசரியாக 12.5 வருடங்கள் வரை ஆயுள் நீட்சி ஏற்படுகிறது. பல ஆய்வுகளில் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை அல்லது எதிர்ப்புச் சக்தியைக் குன்றச் செய்யும் மருந்துகளைப் பெற்றவர்கள், நோய் கண்டறியப்பட்டதிலிருந்து முப்பது ஆண்டுகள் வரைகூட நல்ல நிலையில் வாழ்வது ஆய்வுகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

கராத்தே வீரர் ஷிஹான் ஹுசைனி தீவிரமான வகை ஏபிளாஸ்டிக் அனீமியாவால் பாதிக்கப்பட்டி ருந்ததும் அவரது மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம். இதை வைத்து ஏபிளாஸ்டிக் அனீமியாவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை.

தற்கால ஏபிளாஸ்டிக் அனீமியா சிகிச்சையில் அவ்வப்போது இரத்தச் சிவப்பு செல்கள் மாற்றுவது, தட்டணுக்கள் ஏற்றுவது, இரத்தச் செல்களை உற்பத்தி செய்யும் மருந்துகளை வழங்குவது, பக்றீரியா கிருமித் தொற்று - பூஞ்சைத் தொற்று ஏற்படாமல் இருக்க என்ட்டிபயாடிக், என்ட்டி ஃபங்கல் மருந்துகள் வழங்குவது ஆகியவற்றுடன் எதிர்ப்புச் சக்தியைக் குன்றச் செய்யும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

**இரத்த தானம் செய்வீர்**

ஆரோக்கியமான உடல் நிலையில் இருப்பவர்கள் 56 நாட்களுக்கு ஒருமுறை இரத்த தானம் செய்யலாம். 112 நாட்களுக்கு ஒருமுறை சிவப்பு அணுக்களையும் 7 நாட்களுக்கு ஒருமுறை - வருடத்துக்கு 24 தடவைகள் தட்டணுக்களையும் இந்நோயாளிகளுக்குத் தானமாக வழங்கலாம்.

ஆரோக்கியமாக வாழும் அனைவரும் தொடர்ந்து இரத்த தானம் வழங்க உறுதி ஏற்போம். குருதிசார் நோய்களோடு வாழ்பவர்களின் போராட்டத்தில் உடன் நிற்போம்.

டாக்டர் பாரூக் அப்துல்லா

நன்றி - இந்து




# பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!

**கிருங்கை சேதுபதி**

மகாகவி பாரதியார், 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' என்று ஒரு பாடலைத் தொடங்குகிறார்.

அதனைத் தொடர்ந்து 'பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா' என்றும் பாடுகிறார். வாழ்க என்றும் வெல்க என்றும் முழக்கங்கள் தானே இடுவோம். 'முழங்கிடுவோமடா' என்றுதானே பாடியிருக்க வேண்டும். சரி, முதலில் வாழ்கென்று கூத்திடுவோமடா என்று பாடிய அவர், அடுத்த அடியிலும் வெல்கென்று கூத்திடுவோமடா என்கிறார். இது கூறியது கூறல் இல்லையா? என்ற எண்ணம் எழுந்தது. ஆனாலும், இந்த அடிப்படை நியாயம் பாரதியாருக்குப் புரியாமலா இருந்திருக்கும் என்றே எனக்கும் தோன்றியது.

இப்போதுபோல், பாரதி காலத்தில் தமிழகத்தில், அவ்வளவாக, 'வாழ்க', 'ஒழிக' முழக்கங்கள் பொதுவாழ்வில் இருந்ததா எனத் தெரியவில்லை. கடவுளரையும் மன்னர்களையும் கைகூப்பித் தொழுது வாழ்த்திய காலம் அது. அந்த வாழ்த்தை அப்படியே பெண்மைக்குக் கொண்டுவந்து பொருத்தி மகாகவி பாரதியார் பாடியிருக்கிறார்.

'நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க' என்று தொடங்கும் மாணிக்கவாசகப் பெருமானின் சிவபுராணத்தில் முதல் ஐந்து அடிகள் 'வாழ்க' என்று அமைகிறது. வாழ்க என்னும் வழக்கச் சொல், முழக்கச் சொல் ஆகிறபோது அளபெடுத்து வந்து 'வாஅழ்க' என்று ஓங்கி ஒலிக்கிறது. இதுதான் உரைநடைக்கும் கவிதைக்கும் உள்ள வித்தியாசம்.

'உணர்வினில் வல்லோர் அணி பெறச் செய்வது செய்யுள்' என்கிறது நன்னூல். இலக்கியம் சொல் அமைக்கிறது. கருத்து. செறிவாகிறது. நினைத்துப் பார்த்து, சொல் தேடி நிரப்பி வருவதல்ல, பாடல் என்பது எழுகிற வேகத்தில் உதிக்கிற அதிசயம். அதனால்தான் 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்று மகாகவி பாரதி அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

சிவபுராணத்தின் முதல் ஐந்து அடிகள் 'வாழ்க' என்று வளர்ந்த வேகத்தில், அடுத்துவரும் ஐந்து அடிகளில் அது 'வெல்க' என்று மாற்றம் கொள்கிறது. அது 'வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடியை வெல்க' என்று பாடுகிறது. முன் ஐந்து அடிகளில் மரபுசார் பக்தியுணர்வும் பின் ஐந்து அடிகளில் செயலுரு வெளிப்படும் அனுபவமும் மிளிர்கிறது. இந்தக் கவி அனுபவம், மிக நுட்பமாக உள் அனுபவமாகி, பெண்மையை வாழ்த்தி, மகாகவி பாரதியாரைப் பாட வைக்கிறது.

சிவபுராணத்தில், முதல் ஐந்து அடிகளுக்குப் பின்னர் மாறுகிற முழக்கச் சொல், அடுத்தடுத்த அடியிலேயே பாரதியிடம் மாற்றம் கொண்டுவிடுகிறது. பெண்மைக்குள் தெய்வ தரிசனம் கண்டுவிட்ட பாரதி, அதனை விண்டுரைக்க முயன்ற வெளிப்பாடே இந்தப் பாடல்.

மெய்யாகவே வாழ்விக்கும் பொறுப்பு, பெண்மையிடம் இருக்கிறது என்கிற தெய்வீக உண்மையை உணர்ந்த பாரதி, பெண்மையை வாழ்க என்று வாழ்த்திப் பாடுகிறார். 'வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி' என்றும் வாழ்த்துகிறார். வாயால் வாழ்த்தினால் மட்டும் போதுமா? மனத்தாலும் வாழ்த்த வேண்டும். வாயாலும் மனத்தாலும் வாழ்த்துவது, செயலில் கொண்டுபோய்ச் சேர்க்கும். 'மனைவி வாழ்ந்தால் மனையில் உள்ளோர் வாழ்வர்; வீடு வாழ்ந்தால் நாடு வாழும்; நாடு வாழ உலகு வாழும்' என்கிற உன்னத நெறி இந்தப் பின்புலத்தில் வளர்கிறது. இது வாழ்வியல் ஞானம்.



இதைவிட்டுவிட்டு, மாயாவாதம் பேசி, பெண்மையைக் குறைகூறும் அக்காலத் தத்துவப் போக்கைக் கடுமையாகச் சாடுகிறார் பாரதி, 'பொய்யோ மெய்யோ' என்று வினாத் தொடுக்கும் பாடலுக்கு விரிவான முன்னுரை எழுதுகிறார். அதில் பின்வரும் கேள்விகளைத் தொடுக்கிறார்.

''இந்த உலகமே பொய் என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கிவருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அதைப் பற்றி இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை.

"குடும்பத்தில் இருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலை போலே நிற்கிறாள் மனைவி; நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்விட்டுக் கரைந்தாள்; நம் மகிழ்ச்சியின்போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?''

வீட்டில் குலதெய்வத்தை வைத்துக் கும்பிடுவோரே வீட்டைக் காக்க வந்த குலதெய்வம் மனைவி என்பதை ஏன் மறந்து போனீர்கள்? என்று மறைமுகமாகக் கேட்கிற கேள்வி, இதன் பின்னணியில் ஒலிக்கிறது. 'மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்றால், மனையாளும் தெய்வமன்றோ?' என்று மற்றோர் இடத்தில் இதைக் கேட்டும் விடுகிறார்.

தெய்வத்தை வாழ்த்திப் பாடியும் பேசியும் கூத்துகள் நடத்தியும் வருகிற தேசத்தில், தெய்வம் நிகர்த்த பெண்மையைக் குறைகூறியும் இழிவுபடுத்தியும் கொச்சைப்படுத்தியும் நிகழ்த்திய கூத்துகளை மகாகவி பாரதி பார்த்திருக்கிறார். ஏன், இன்றளவும் நகைச்சுவை என்கிற பெயரில் யாரையேனும் எள்ளித்தானே நாம் நகையாடுகிறோம். அதில் பெண்மைதான் முதலில் சிறுமைப்படுத்தப்படுகிறது. அவமானப்படுத்தப் பயன்படும் சொற்கள் அத்தனையும் பெரும்பாலும் பெண்மையை இழிவுபடுத்தி எழுகிற சொற்கள்தாமே. அதிலும் மாதரே தம்மை இழிவுசெய்யும் மடமைக்கு ஆட்பட்டுவிடுகிறார்களே. இந்தப் போக்கை ஆழ உணர்ந்த மகாகவி பாரதி, 'பெண்மை வாழ்க' என்று முழக்கம் இட்டால் மட்டும் போதாது என்று நினைக்கிறார். வழக்கத்துக்கு வரவேண்டும் என்று துடிக்கிறார். அப்போதைய மக்களின் மகத்தான ஊடகமாகத் திகழ்ந்த கூத்துகள் வாயிலாக, இந்தக் கொள்கை முழக்கம் அரங்கேற வேண்டுமென ஆசைப்படுகிறார்.

''பெண்மை வாழ்க'' என்று கூச்சலிடுவதாலும் கூத்திடுவதாலும் பெண்மை வாழ்ந்துவிட முடியாது. அது வெல்ல வேண்டும். அதற்கான வழிகளைச் சொல்ல வேண்டும். அதற்குக் கூத்தே சரியான ஊடகம் என்று தெளிவு கொண்ட மகாகவி பாரதி, அந்தக் கூத்தின் கருப்பொருளும் உருப்பொருளும் எவ்வாறு அமையவேண்டும் என்கிற கருத்தை இப்பாடலில் நிறைக்கிறார்.

இன்றைக்குப் பொதுவெளியில் கூத்துகள் குறைந்துவிட்டன. அறைகளில், சிறிய திரைகளில் அவை ஒளிர்கின்றன. கைப்பேசிக் கருவிகளில் வளர்கின்றன. ஆனால், அவற்றில் மனித மாண்பும் மகளிர் பெருமையும் சிறக்கின்றனவா என்பதுதான் பெருங்கேள்வி. காட்சிப்படுத்துதலின் நேர்த்தியில் கவனம் செலுத்தி, சபலத்தால் சலனமுறுவோர்க்கு, அவற்றின் இறுதியில் சொல்லப்படுகிற நீதியை உணர நேரம் ஏது? சட்டத்தின் முன்பு பெருந்தண்டனைக்கு உள்ளாக்கும் குற்றங்களைப் புரிய அக்காட்சிகளே உற்ற துணையாகின்றன என்கிறார்களே?

இப்படியெல்லாம் பெண்மையின் உண்மையை, அவற்றுள் ஒளிரும் தெய்வீக வலிமையைக் குறைத்தும் பழித்தும், பல சந்தர்ப்பங்களில் இழித்தும் சித்திரப்படுத்துகிற காட்சிகளுக்கான மாற்றை இந்தப் பாடலில், பாரதி முன்வைக்கிறார். 'தாயின் பெயரிலும் தாரத்தின் பெயரிலும் தன்மை, இன்பம், நற்புண்ணியம் சேர்ந்தன' என்கிறார். அந்த அன்பு வாழ்க என்று ஆரவாரம் இல்லாமல் 'அமைதியில் ஆடுவோம்' என்கிறார். 'ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்' என்கிறார். அடிதடி சண்டைகளே வீரம் என்று காட்டப்படும் காட்சிகளுக்கு மாறாக, 'பெண் அறத்தை ஆண்மக்கள் வீரந்தான் பேண வேண்டும். அதற்குப் பிறகு யார்க்கும் தாழ்வில்லை' என்கிறார்.

'கண்ணை இமை காப்பதுபோல, காதல் இன்பத்தைக் காத்திடுவோமடா' என்று மகாகவி பாரதி சொல்லும் காதலுக்கும் இன்றைக்குக் காட்சிக்குள்ளாகும் காதலுக்கும் பல வேற்றுமைகள் இருக்கின்றன.

காதலைக் கொண்டாடுபவர்களின் கைகளில் மதுக்கோப்பைகளே கொடுக்கப்படுகின்றன. அரைகுறை ஆடைகளே அவர்களுக்கு அணிவிக்கப்படுகின்றன. ஆபாசமிகுந்த அங்க அசைவுகளே ஆடல்களாகவும் அதற்கேற்ற முழக்கங்களே இசைக் கூறுகளாகவும் அதற்குப் பொருந்தும் சொற்களே பாடல்களாகவும் பவனி வருகின்றன. அவையே பலராலும் பார்த்து ரசிக்கப்படுகின்றன. இந்த மாயை, மயக்கங்கள் எத்தனை பேரின் வாழ்வில் வீழ்ச்சிகளை உருவாக்கியிருக்கின்றன. குடும்பத்தில் இருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? என்று முன்னர் எழுதிய மகாகவி பாரதியின் வாசகங்களை இந்த இடத்தில் பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது. இதற்கு மறுதலையாக, பாரதி கொடுக்கும் மதுவையும் மனதுக்கு மகிழ்வூட்டும் ஆடல் பாடல் இசைக் கோலங்களையும் நினைவூட்டத் தோன்றுகிறது.

சக்தி என்ற மதுவை உண் போமடா
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே
ஒத்து இயல்வதோர் பாட்டும் குழல்களும் ஊர் வியக்கக் களித்துநின் றாடுவோம்

இதுவே சக்திக் கூத்து. இதில் பெண்மை வாழவேண்டும். பெண்மை வெல்ல வேண்டும். வெல்ல வேண்டிய பெண்மையைக் கொல்லத் துணிகிற கொடுமைகளுக்கு இதுவே மாற்று. இந்தச் செயற்பாடே மருந்து.

சக்தி நிலையங்களான இல்லங்களில் பெண்மை தோற்கிறபோது, அது வாழமுடியாமல், நீதிமன்றங்களை நோக்கிப் போகிறது. ' மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகளை' மறந்து மறைத்து எழுகிற வாத, தர்க்கப் போக்குகளில் சட்டம் தன் கடமையைச் செய்கிறது. வாய்மை வெல்கிறது. ஆயினும் பல சங்கடங்கள் நேர்கின்றன. எதிர்காலச் சந்ததியர் வாழ்வு சிக்கலுக்குள்ளாகிறது.

சட்டத்தின் முன்னால் வெல்லும் பெண்மை, சராசரி வாழ்விலும் வெல்ல வேண்டும். உண்மையில் அது பெண்மையின் வெற்றியல்ல, மானுடத்தின் வெற்றி. அதனால்தான் மகாகவி பாரதி, பெண்மை வாழ்க என்றும் பெண்மை வெல்க என்றும் வெற்று முழக்கங்கள் இடாமல், 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா', ' பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா' என்கிறார்.

நன்றி - தினமணி



# வலுக்கும் வரி மோதல்: சீனாவுக்கான பரஸ்பர வரியை 125%ஆக அதிகரித்த அமெரிக்கா

## ஏனைய நாடுகளுக்கான புதிய வரிவிதிப்பு 90 நாட்களுக்குத் தற்காலிக நிறுத்தம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 60 நாடுகளின் பொருட்கள் மீதான பரஸ்பர வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்திவைப்பதாக அறிவித்துள்ள இந்த அறிவிப்பு சீனாவுக்குப் பொருந்தாதென்று கெடுபிடி காட்டியுள்ளதுடன், சீனப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை 125 சதவீதமாக அறிவித்து அதிரடி காட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கடந்த 02ஆம் திகதி இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றுக்கான பரஸ்பர வரி பட்டியலை வெளியிட்டார். இதில் சீனப் பொருட்களுக்கான வரி 34 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. இதற்குப் பதிலடியாக அமெரிக்காவின் அனைத்துப் பொருட்களுக்கும் 34 சதவீத வரி விதிக்கப்படுமென சீனா அறிவித்தது. இதற்குப் பதிலடியாக அமெரிக்கா, சீனாவின் கூடுதல் வரி விதிப்புக்கு அபராதமாக 50 சதவீத வரியை விதித்தது. இதனால் சீனப் பொருட்களின் மீதான வரி 104சதவீதமாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், இவ்விரு நாடுகளுக்கிடையிலான வரி யுத்தம் தீவிரமடைய அமெரிக்கப் பொருட்களுக்கான வரி நேற்று (10) முதல் 84% ஆக உயர்த்தப்படுமென சீன நிதியமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்தது. இந்நிலையில்தான் உலக நாடுகளின் பொருட்கள் மீதான பரஸ்பர வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்திவைப்பதாக அறிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப். ஆனால், இது சீனாவுக்குப் பொருந்தாது என்று அறிவித்துள்ளார்.

**சீனாவுக்கு மட்டும் 125% வரி**

பரஸ்பர வரி விதிப்பை அமுல்படுத்திய 24 மணிநேரத்திலேயே ட்ரம்ப் வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்திவைத்துள்ளார்.



வணிகப் போர், சர்வதேச பங்குச்சந்தைகளின் சரிவு போன்ற தாக்கங்களாலும் உலகளாவிய பொருளாதார மந்த நிலை ஏற்படலாமென்ற அச்சத்தாலும் ட்ரம்ப் பரஸ்பர வரி விதிப்பை 24 மணிநேரத்திலேயே திரும்பப் பெற்றதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும், பரஸ்பர வரி விதிப்பில் பேஸ்லைன் வரியாக 10 சதவீத வரி விதிப்பு மட்டும் எல்லா நாடுகளுக்குமே தொடருமென்றும் ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது. ஆனால், சீனாவுக்கான பரஸ்பர வரியை மட்டும் ட்ரம்ப் 125 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**ட்ரம்ப் விளக்கம்:** வரி நிறுத்தம் பற்றி ட்ரம்ப் வெளியிட்ட அறிக்கையில், "பரஸ்பர வரி விதிப்பையடுத்து உலகளவில் பல்வேறு நாடுகளும் இது தொடர்பாக எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவே விருப்பம் தெரிவித்தன. சீனாவைப்போல வரிக்கு வரி விதிக்கவில்லை. உலக நாடுகளின் விருப்பங்களை மதித்து நாங்கள் புதிய வரி விதிப்பை 90 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கிறோம்.

ஆனால், சீனா எங்களை மதிக்கவில்லை. எங்களின் பரஸ்பர வரிக்கு மேலும் மேலும் வரி விதிக்கிறது. இதனால் நாங்கள் சீனாவுக்கான வரியை 104 சதவீதத்திலிருந்து 125 சதவீதமாக அதிகரித்துள்ளோம்.

நாங்கள் ஏற்கனவே எச்சரித்திருந்தோம். எங்கள் வரிக்கு வரி விதிக்க வேண்டாம் என்று. சீனா அதை கேட்கவில்லை. நாங்கள் இப்போது அதன் மீதான வரியை 125 சதவீதமாக அதிகரித்துள்ளோம். எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் பேச்சுவார்த்தை நடத்துங்கள்; பலன் பெறுங்கள்; எதிர்த்துப் பாருங்கள்; எகிறும் வரியை அனுபவியுங்கள்" - எனத் தெரிவித்துள்ளார்.

# காஸாவின் பெரும் பகுதிகளை கைப்பற்றிய இஸ்ரேல்

## வான் தாக்குதலில் 35 பேர் பலி: 55 பேர் காயம்; 88 பேர் மாயம்!

காஸாமீது தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டுவரும் இஸ்ரேல் இராணுவம், காஸாவில் மிகப்பெரிய பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காஸாவின் குடியிருப்புப் பகுதியில் நேற்று (10) இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 35 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 55 பேர் காயமடைந்துள்ள நிலையில் 88 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கியது. இந்நிலையில், இஸ்ரேலுக்குள் அதிரடியாகப் புகுந்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் போராளிகள் சுமார் 1,138இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களைக் கொன்றதுடன் 200இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். பதிலுக்கு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் மற்றும் ஹமாஸ் போராளிகள் கொல்லப்பட்டனர்.

ஒன்றரை ஆண்டுகளாக இந்தப் போர் நீடித்துவரும் நிலையில், கடந்த ஜனவரியில், 42 நாட்களுக்கான முதற்கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அது முடிந்தபின்னர், போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பல்வேறு நிபந்தனைகள் விதித்தது. ஹமாஸ் அதை ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.

அந்தவகையில் இஸ்ரேல் காஸாமீது இதுவரை மேற்கொண்ட தாக்குதல்களில் பலஸ்தீனர்கள் 50,846இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,15,729இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், காஸாவில் மிகப்பெரிய பகுதிகளை இராணுவம் கைப்பற்றிவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதன்மூலம் பலஸ்தீனம் தனிமைப்படுத்தப்பட்டு



விட்டதாகவும் கூறியுள்ளது. மேலும், காஸாவில் குடியிருப்புப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 35 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 55 பேர் காயமடைந்துள்ளனர்.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் கொட்ஸ் தெரிவிக்கையில், "காஸாவிலுள்ள மிகப்பெரிய பகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகள் எங்களின் இராணுவம் கட்டுப்பாட்டிலுள்ளன. பலஸ்தீனம் சிறுமைப்படுத்தப்பட்டு, தனித்து விடப்பட்டுள்ளது. பணயக் கைதிகளை விடுவிக்கும் வரையிலோ அல்லது ஹமாஸ் போராளிகளை வீழ்த்தும் வரையிலோ இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும்" - எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, விரைவில் பலஸ்தீனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஏ அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான இலங்கை ஏ குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள குறித்த தொடருக்கான இலங்கை ஏ அணியின் தலைவராக துடுப்பாட்ட வீரர் சதீர சமரவிக்ரம பெயரிடப்பட்டுள்ளார். தேசிய அணியில் விளையாடியுள்ள மொஹமட் சிராஸூம் இவ்வணியில் இடம்பெற்றுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★

பார்முலா1 கார்பந்தயத்தின் 3ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட்பிரி அங்குள்ள சுஜூகா ஓடுதளத்தில் நடந்தது. 307.471 கிலோமீற்றர் பந்தய தூரத்தை கொண்ட ஓட்டத்தில் முதல் வரிசையிலிருந்து புறப்பட்ட 4 முறை சம்பியனும் ரெட்புல் அணி வீரருமான மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (நெதர்லாந்து) 1 மணி 22 நிமிடம் 06 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். இதுவரை நடந்துள்ள 3 சுற்றுகள் முடிவில் லான்டோ நோரிஸ் 62 புள்ளிகளுடன் முதலிடத்திலும் வெர்ஸ்டப்பென் 61 புள்ளிகளுடன் 2வது இடத்திலும் உள்ளனர். 4ஆவது சுற்றுப் போட்டி பஹ்ரைனில் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★

ஜமைக்காவின் கிங்ஸ்டனில் நடந்த முதலாவது கிராண்ட்ஸ்லாம் ட்ராக் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றிபெற்ற பிரித்தானியாவின் ஒலிம்பிக் பதக்கம் வென்ற மேத்யூ ஹட்சன்-ஸ்மித் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் பரிசுத் தொகையை வென்றார். 30 வயதான ஹட்சன்-ஸ்மித், 20.77 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார். அதேநேரத்தில் டிரினிடாட் மற்றும் டொபாகோ தீவு நாட்டின் ஜெரீம் ரிச்சர்ட்ஸ் மற்றும் ஜமைக்காவின் டியான்ட்ரே வாட்கின் ஆகியோர் முறையே 2ஆவது, 3ஆவது இடத்தைப் பிடித்தனர்.

★★★★★★★★★★★★★★★★★★

அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் வீராங்கனையான ஆஷ்லே கார்ட்னர் நிச்சயதார்த்தமாகி ஒரு வருடத்துக்குப் பிறகு தனது நீண்ட நாள் காதலியான மோனிகாவை திருமணம் செய்துகொண்டார். தன்பாலின ஈர்ப்பாளர்களான இவர்களது திருமணம் கடந்த திங்கட்கிழமை குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

★★★★★★★★★★★★★★★★★★

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான நசீர் ஹூசைன் கடந்த 2023ஆம் ஆண்டு ஐ.சி.சியின் ஊழல் தடுப்புச் சட்டத்தை மீறியதற்காக 6 மாத இடைநீக்கத்துடன் 2 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட தடை செய்யப்பட்டார். இதனால் அவர் உள்ளூர் தொடர்கள் உட்பட எந்தக் கிரிக்கெட்டிலும் களமிறங்கவில்லை. இந்நிலையில், அவரது தடைக் காலம் தற்போது நிறைவடைந்துள்ளதால் அவர் மீண்டும் கிரிக்கெட் விளையாடலாம் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# ஐ.சி.சியின் மார்ச் மாதத்துக்கான பரிந்துரை பட்டியல் வெளியீடு




ஐ.சி.சியின் மார்ச் மாதத்துக்கான சிறந்த வீர, வீராங்கனை விருதுக்கான பரிந்துரை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சிறந்த வீரர் விருதுக்கான போட்டியில் இந்திய அணியின் ஸ்ரேயாஸ் ஐயர், நியூசிலாந்து அணியின் ரச்சின் ரவீந்திரா மற்றும் நியூசிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஜேக்கோப் டஃபி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அண்மையில் நிறைவடைந்த ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்க் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் ஸ்ரேயாஸ் ஐயர் மற்றும் நியூசிலாந்து வீரர் ரச்சின் ரவீந்திரா ஆகியோர் அபாரமாக செயற்பட்டு ஓட்டங்கள் குவித்தார். ஜேக்கோப் டஃபி, பாகிஸ்தானுக்கு எதிரான ரி20 தொடரில் அபார பந்துவீச்சை (3 போட்டிகளில் 13 விக்கெட்கள்) வெளிப்படுத்தினார்.

மகளிர் பிரிவில் அமெரிக்காவின் சேட்னா பிரசாத், அவுஸ்திரேலியாவின் அன்னாபெல் சதர்லாண்ட், அவுஸ்திரேலியாவின் ஜோர்ஜியா வொல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கை உதைபந்து அணியில் இடம்பெற்ற வீரருக்குப் பாராட்டு



(தம்பலகாமம் செய்தியாளர்)

19 வயதின் கீழ் இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட தி/கிண்ணியா, சூரங்கல் அல் அமீன் வித்தியாலய மாணவன் ஏ.எச்.எம்.இர்பானுக்கு பாராட்டு நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.டபிள்யூ.எம்.பைசல் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இத்தெரிவில் 200க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டதுடன், தேசிய உதைபந்தாட்ட அணிக்காக முப்பது பேர் கொண்ட குழு தெரிவாகின. அக்குழுவில் இவரும் உள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய எமது பாடசாலை உதைபந்தாட்ட துறையிலே தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தடம் பதித்து வருகிறது. பாடசாலை வரலாற்றில் 4 வீரர்கள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நடத்தப்பட்ட தெரிவுக்காக சென்றிருந்தனர். அதில் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் உதைபந்தாட்டத்துக்கான போதிய வசதி இல்லாவிட்டாலும், பாடசாலையின் வழிகாட்டலும் வீரர்களின் மன வலிமையும் தேசிய ரீதியாக சர்வதேச ரீதியாக சாதனை படைத்துள்ளதாக அதன் அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இப்பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.நிஸ்மித், உடற்கல்வி ஆசிரியர் எஸ்.எம்.அஸ்மித், வினையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆர்.எஸ்.எம். நபீர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் பாடசாலை சமூகம் இணைந்து ஊக்கப்படுத்தியமையால்தான் இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணியில் இப்பாடசாலை மாணவனை தெரிவுசெய்ய காரணமாக அமைந்துள்ளது - என்றார்.

## பதவி விலகும் கேரி ஸ்டெட்




நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலகுவதாக கேரி ஸ்டெட் தெரிவித்துள்ளார். கடந்த 2018ஆம் ஆண்டு முதல் அனைத்து வடிவிலான போட்டிகளுக்குமான நியூசிலாந்து அணியின் பயிற்சியாளராக கேரி ஸ்டெட் செயற்பட்டு வருகிறார்.

இந்நிலையில், நியூசிலாந்து அணியின் வெள்ளைப் பந்து போட்டிகளுக்கான (ரி20 மற்றும் ஒருநாள்) பயிற்சியாளர் பொறுப்பி லிருந்து அவர் விலகுவதாக அறிவித்துள்ளமை முக்கியத்துவம் பெறுகிறது. 53 வயதாகும் கேரி ஸ்டெட் தலைமையிலான நியூசிலாந்து அணி பல்வேறு உயரங்களை எட்டியுள்ளது. எனினும், இவர் தொடர்ந்து டெஸ்ட் அணிக்கு பயிற்சியாளராக செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பா.ஜ.கவுடன் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த இந்திய கிரிக்கெட் வீரர்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கேதர் ஜாதவ் கடந்த ஆண்டு அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெற்ற நிலையில், தற்போது அரசியலில் தடம்பதித்துள்ளார். அதன்படி மும்பையில் மகாராஷ்டிர அமைச்சரும் பா.ஜ.க தலைவருமான சந்திரசேகர பவன்குலே முன்னிலையில் அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கட்சியான பா.ஜ.கவில் இணைந்தார்.



இதுபற்றி ஜாதவ் கூறுகையில், "சத்ரபதி சிவாஜிக்கு தலைவணங்குகிறேன். பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸின் தலைமையில் பா.ஜ.க. சிறப்பாக செயற்படுகிறது. அதனால், பா.ஜ.கவில் இணைந்துள்ளேன்" - என்றார்.

39 வயதான கேதர் ஜாதவ் 2014 முதல் 2020 வரை ஆறு ஆண்டுகளில் 73 ஒருநாள் போட்டிகளிலும் 9 ரி20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார். இதற்கு முன்னதாக, இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கௌதம் கம்பீர், இர்பான் பதான், முஹமட் அசாருதீன், நவ்ஜோத் சிங் சித்து, ரவீந்திர ஜடேஜா உள்ளிட்டோரின் வரிசையில் கேதர் ஜாதவும் அரசியல் பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

**IPL - 2025**

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 25
சென்னை VS கொல்கத்தா
சென்னை - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 23
குஜராத் - 217/6 (20)
ராஜஸ்தான் - 159/10 (19.2)
குஜராத் 58 ஓட்டங்களினால் வெற்றி

## மக்கள் அபிமான விருதுகள் 2025 இல் கௌரவிப்பைப் பெற்ற பேபி ஷெரமி



இலங்கையில் அதிகளவு விரும்பப்படும் குழந்தைகள் பராமரிப்பு வர்த்தக நாமமான பேபி ஷெரமி, SLIM Kantar மக்கள் அபிமான விருதுகள் 2025 வழங்கும் நிகழ்வில் மக்கள் அபிமானம் பெற்ற ஆண்டின் சிறந்த குழந்தைகள் பராமரிப்பு வர்த்தக நாமம் எனும் பெருமைக்குரிய விருதை வென்றுள்ளது. அதனூடாக தேசத்தின் நம்பிக்கையை வென்ற மற்றும் அதிகளவு விரும்பப்படும் குழந்தைகள் பராமரிப்பு வர்த்தக நாமம் எனும் தனது நிலையை உறுதி செய்துள்ளது.

குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் நம்பிக்கையூட்டுவதில் 60 வருடங்களுக்கும் மேலாக இயங்குவதைக் கொண்டாடும் வர்த்தக நாமத்தின் பயணத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக இந்தக் கௌரவிப்பு அமைந்துள்ளது.

SLIM இனால் முதல் தடவையாக இந்தப் பிரிவு அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையில், சிறந்த குழந்தைகள் பராமரிப்பு வர்த்தக நாமம் எனும் இந்தக் கௌரவிப்பை பேபி ஷெரமி பெற்றுள்ளமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இலங்கையர்களிடையே Kantar முன்னெடுத்த சுயாதீன ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தத் தெரிவை மேற்கொண்டிருந்தது. இந்த ஆண்டின் விருதுகளின் தொனிப்பொருளாக 'Heart Share' அமைந்திருந்ததுடன், இலங்கை பல தலைமுறைகளாக குடும்பங்களுடன் பேபி ஷெரமி கட்டியெழுப்பியுள்ள உணர்வுபூர்வமான இணைப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

## SLIIT நிறுவனத்தின் 25 வருட மரபைப் பறைசாற்றும் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்




இலங்கையின் முன்னணி அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனமான SLIIT நிறுவனம் கல்வியின் சிறப்பு, புத்தாக்கம் மற்றும் தொழிற்றுறைக்கான பங்களிப்பு உள்ளிட்ட தனது 25 வருட மரபைச் சிறப்பிக்கும் வெள்ளிவிழாவை 2025 அண்மையில் கொண்டாடியது. இந்த நிகழ்வு கொழும்பு சினமன் லைஃவ், சிட்டி ஒஃவ் ட்ரீம்ஸ் ஹோட்டலில் கோலாகலமாக இடம்பெற்றது.

1999ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தொழில்நுட்பக் கல்வியில் முன்னணியில் திகழ்ந்துவரும் SLIIT நிறுவனம், ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளின் தகவல்தொழில்நுட்பத் துறையில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர். SLIIT நிறுவனத்தின் சிறப்பான பயணம் மற்றும் மாணவர்கள், பணியாளர்கள், தொழிற்றுறை பங்காளர்கள், உலகளாவிய ரீதியிலான பங்களிப்பாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான தளமாக இந்த வெள்ளிவிழாக் கொண்டாட்டம் அமைந்தது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்ரீஃபன்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஹாா்லென் ஹெய்ன் ஆகியோருடன் தொழிற்றுறை நிபுணர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். வெளிநாட்டு இராஜதந்திரிகள், SLIIT பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பெருநிறுவனத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், பல்கலைக்கழகப் பங்குதாரர்கள், சிரேஷ்ட கல்வியியலாளர்கள், பெரு நிறுவனப் பிரமுகர்கள் உள்ளிட்ட 350க்கும் அதிகமான விருந்தினர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

## சர்வதேச மகளிர் தினம் 2025 ஐ பணியிட சமத்துவத்துடன் கொண்டாடிய Expack



அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் துணை நிறுவனமும் இலங்கையின் முன்னணி அலைவுநெளிவுள்ள பொதித் தீர்வுகள் உற்பத்தியாளரான Expack Corrugated Cartons PLC, சர்வதேச மகளிர் தினம் 2025ஐ, களனியில் அமைந்துள்ள தனது நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலை வளாகத்தில் ஊக்குவிப்பு நிகழ்வுடன் கொண்டாடியது. பெண்களின் பெறுமதி வாய்ந்த பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையிலும் பாலின சமத்துவம், வலுவூட்டல் மற்றும் பணியிட நலன்பேணல் ஆகியவற்றுக்கான Expack இன் அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாகவும் அமைந்திருந்தது.

நிறுவனத்தின் பரந்த DEI கொள்கைகளுக்கமைய தனது 300 வலிமையான பணியாளர்களுக்கு சிறந்த பணியிடச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து, உடல்சார் நலனை மேம்படுத்துவதில் இந்த ஆண்டின் கொண்டாட்டங்கள் கவனஞ் செலுத்தியிருந்தன. நிகழ்வின் ஓர் அங்கமாக, உயர் அர்ப்பணிப்பு, தலைமைத்துவம் மற்றும் தமது நிலைகளில் புத்தாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்த சிறந்த பெண் ஊழியர்களை Expack கௌரவித்திருந்தது. அதனூடாக, பணியிடங்களில் பெண்களின் அர்ப்பணிப்பை மேம்படுத்துவது மற்றும் கௌரவிப்பதில் நிறுவனம் கொண்டுள்ள ஈடுபாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முடிசூட்டப்பட்ட கொமர்ஷல் வங்கி




SLIM Kantar மக்கள் விருதுகள் - 2025 நிகழ்வில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஆண்டுக்கான மக்களின் தனியார் வங்கி சேவைகள் வர்த்தக நாமமாக கொமர்ஷல் வங்கி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் மிகவும் பிரபலமான தனியார் துறை வங்கி என்ற வங்கியின் நிலையை உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

இந்த விருதுகள் நிகழ்வானது முன்னணி உலகளாவிய நுண்ணறிவு நிறுவனமான Kantar இன் ஆய்வின் அடிப்படையில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால் (SLIM) நடத்தப்படுவதுடன் இவ்விருதுகள் இலங்கையில் நுகர்வோர் சார்ந்த அங்கீகாரத்துக்கான இறுதி சான்றாகக் கருதப்படுகின்றன.

இவை நிபுணர்கள் குழுவால் அல்லாமல், நுகர்வோர் வாக்குகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதுடன் மேலும் இலங்கையர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வென்ற வர்த்தக நாமங்கள் மற்றும் ஆளுமைகளை அங்கீகரிக்கின்றன.

இந்த விருதானது மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையில் வங்கியின் சேவைகள் தொடர்ந்து ஏற்படுத்தும் சிறப்பான மாற்றங்களுக்கும் வங்கியின் வர்த்தக நாம கட்டமைப்பு முயற்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளின் செயற்றிறனுக்கும் ஒரு சான்றாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது. வாடிக்கையாளர்களுடனான வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாடு, புதுமையான பிரசாரங்கள் மற்றும் சிறந்த வங்கி அனுபவங்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவை இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

இலங்கையின் மிகப்பாரிய தனியார் துறை வங்கியும் நாட்டில் அதிக விருதுகளைப் பெற்ற நிதி நிறுவனமுமான கொமர்ஷல் வங்கி, நான்கு மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்கி வருவதுடன் மேலும், இலங்கையில் மிகப்பாரிய தனியார் துறை கடன் வழங்குநராகவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் (SME) துறைக்கு மிகப்பாரிய கடன் வழங்குநராகவும் திகழ்கிறது.

## வரிக்குப் பிந்திய இலாபத்தில் அபார வளர்ச்சியை பதிவு செய்துள்ள ஓரியன்ட் பைனான்ஸ் பிஎல்சி





ஓரியன்ட் பைனான்ஸ் பிஎல்சி, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் அதிசிறந்த நிதிசார் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், பிரதான நிதிசார் குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வரிக்குப் பிந்திய இலாபத்தில் நிறுவனம் 161% எனும் அபார வளர்ச்சியைப் பதிவு செய்து, ரூ. 254.6 மில்லியனை எய்தியிருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ரூ. 97.6 மில்லியனாகக் காணப்பட்டது. தேறிய வட்டி வருமானம் ரூ. 1.21 பில்லியனிலிருந்து 37% இனால் உயர்ந்து ரூ. 1.66 பில்லியனாகக் காணப்பட்டது. அதனூடாக, உறுதியான பிரிவுசார் வளர்ச்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு வினைத்திறன்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

மொத்த சொத்துகள் 28% இனால் உயர்ந்து ரூ. 25.3 பில்லியனாகப் பதிவாகியிருந்ததுடன், கடன்கள் மற்றும் வருமதிகள் 36% இனால் உயர்ந்து ரூ. 19.76 பில்லியனாகப் பதிவாகியிருந்தன. நிறுவனத்தின் வைப்புகள் இருப்பு ரூ. 15.12 பில்லியனாக உயர்ந்திருந்தது. இது 19% வளர்ச்சியாகும். அதனூடாக, வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கை பிரதிபலிக்கப்பட்டிருந்தது. அத்துடன், நிறுவனத்தின் மொத்த பங்குகள் 12% இனால் உயர்ந்து ரூ. 3.86 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

## வாணிப இணக்கப்பாட்டு சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ள Hemas Manufacturing



தொழிற்பாட்டு மேன்மை மற்றும் சர்வதேச வாணிப இணக்கப்பாடு ஆகியவற்றில் சாதனை இலக்கை நிலைநாட்டும் வகையில், Hemas Manufacturing (Pvt) Ltd நிறுவனமானது இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து 'Authorized Economic Operator (AEO) Tier 1 Certification' என்ற சான்று அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளதுடன், இணக்கப்பாடு, தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் சர்வதேச வாணிப எளிதாக்கம் ஆகியவற்றில் முன்னோடி என்ற தனது ஸ்தானத்தையும் மீள உறுதிப்படுத்தியுள்ளது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற இந்தச் சான்று அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ள இலங்கையிலுள்ள 48 நிறுவனங்கள் கொண்ட பிரத்தியேகக் குழுவில் தற்போது ஹேமாஸ் நிறுவனமும் இணைவதற்கு இது வழிவகுத்துள்ளதுடன், வாணிபம் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தில் மிகச் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அதன் அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

AEO Tier Programme என்ற நிகழ்ச்சித்திட்டமானது உலக சுங்க ஸ்தாபனத்தால் (World Customs Organization - WCO) முன்னெடுக்கப்படுவதுடன், நாடு கடந்த வாணிபத்தில் பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் வினைத்திறன் ஆகியவற்றில் அதியுயர் தராதரங்களைக் கடைப்பிடிக்கின்ற நிறுவனங்களை அங்கீகரித்து உறுதிப்படுத்துகின்ற ஒரு சர்வதேச ரீதியான வேலைத்திட்டமுமாகும்.

## இரண்டாவது தடவையாகவும் ரூ. 5 பில்லியனுக்கும் அதிகமான தொகையை இலாபமாகப் பதிவுசெய்துள்ள ஜனசக்தி லைஃவ்




இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் ஜனசக்தி லைஃவ், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ரூ. 5.7 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவுசெய்துள்ளது. தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூ. 5 பில்லியன் பெறுமதியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி லியனகே கருத்துத் தெரிவிக்கையில், "2024 ஆம் ஆண்டில் நாம் கொண்டிருந்த உறுதியான நிதிப் பெறுபேறுகள் என்பது எமது காப்புறுதிதாரர்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில் நாம் கொண்டுள்ள எமது மூலோபாய நோக்கு, சிறப்பான தொழிற்பாடு மற்றும் உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.



சந்தையில் உறுதியற்ற நிலை காணப்பட்ட போதிலும் எம்மால் தொடர்ந்தும் வளர்ச்சியைப் பதிவுசெய்து, எமது பங்குதாரர்களுக்கும் காப்புறுதிதாரர்களுக்கும் சிறந்த பெறுமதியைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. எமது வளர்ச்சி என்பது, தொழிற்றுறை வளர்ச்சியின் இரட்டிப்பு மடங்காக அமைந்திருப்பதுடன், 44% வருமான வளர்ச்சியை எய்தி, ரூ. 6.6 பில்லியன் கட்டுப்பண வருமானத்தைக் கடந்துள்ளது.

அத்துடன், எமது முதலீட்டாளர்கள் மற்றும் பங்காளர்களுக்கு வழங்கப்படும் பெறுமதி உருவாக்கத்தில் எவ்விதமான சமரசங்களுமின்றி, ரூ. 5.7 பில்லியனுக்கும் அதிகமான தொகையை வரிக்கு முந்திய இலாபமாகவும் பெற்றுள்ளது" - என்றார்.



National Development Bank (நெஷனல் டெவெலப்மெண்ட் வங்கி-NDB) ஆனது டிசம்பர் 31ஆம் திகதி, 2024 அன்று முடிவடைந்த முழு ஆண்டுக்கான அதன் நிதியியல் பெறுபேறுகள் மற்றும் வருடாந்த அறிக்கையை வெளியிட்டதைத் தொடர்ந்து அண்மையில் அதன் முதலீட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கான அழைப்பு நிகழ்வை நடத்தியது. நிகழ்வில் ஹிமாலி நந்திகா - பிரதம முகாமையாளர், நிதி அலெக்ஸ் பெரேரா - துணைத் தலைவர், CRO K.V வினோஜ் - பிரதிப் பிரதம நிறைவேற்றதிகாரி, செலும் எதிரிசிங்க - பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி, சஞ்சய பெரேரா - துணைத் தலைவர், தனிநபர் வங்கி மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் தமித சமரநாயக்க - துணைத் தலைவர், திறைசேரி குமுதாரி பீரிஸ் - சிரேஷ்ட முகாமையாளர், நிதி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## உலக வாய்ச் சுகாதார தினம் 2025 ஐ கொண்டாடியுள்ள லிங்க் சுதந்த




Link Natural Products நிறுவனத்தின் ஒரு முன்னணி வர்த்தக நாமமாகவும் இலங்கையில் மிகவும் நம்பிக்கைக்குரிய வாய்ப் பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் திகழ்ந்து வருகின்ற லிங்க் சுதந்த, ருவான்புர தேசிய கல்வியியல் கல்லூரியில் பிரதான நிகழ்வொன்றை ஏற்பாடு செய்து உலக வாய்ச் சுகாதார தினம் 2025 ஐ சிறப்பாகக் கொண்டாடியுள்ளது. 400 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், ஒட்டுமொத்த உடல்நலனுக்கு வாய்ச் சுகாதாரம் எந்தளவு தூரம் முக்கியமானது என்ற வர்த்தக நாமத்தின் நிலைப்பாட்டை மீளவும் குறித்த நிறுவனத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். 'மகிழ்ச்சியான வாழ்க்கை, மகிழ்ச்சியான உள்ளம்' என்ற சர்வதேச தொனிப்பொருளுடன் உலக வாய்ச் சுகாதார தினம் 2025 கொண்டாடப்பட்டதுடன், வாய்ச் சுகாதாரம் மற்றும் உள நலன் ஆகியவற்றுக்கிடையிலான ஆழமான தொடர்பையும் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்த முக்கியமான இணைப்பை தெளிவாக இனங்கண்டுள்ள லிங்க் சுதந்த, சிறந்த வாய்ப் பராமரிப்பு பழக்கங்களை ஊக்குவிப்பதற்காக நிபுணர்களின் தலைமையில் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் அடங்கிய நிகழ்வை நடத்தியுள்ளது.

கஹவத்தை உதவிப் பிரதேச செயலாளர் ஜே.என்.ரி.பீ. குமாரி இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளதுடன், புகழ்பெற்ற பல் மருத்துவ நிபுணர் வைத்தியர் அநுர அபேவர்த்தன வாய்ச் சுகாதாரம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியம் ஆகியவற்றுக்கிடையிலான உள்ளார்ந்த உறவுமுறை குறித்து ஆழமான அறிவைப் பகிரும் அமர்வொன்றை நடத்தினார்.

# மாணவர்களின் பய உணர்வும் கல்வி சமூகமயமாக்கலும்

இன்றைய சிக்கல்மிகு சமுதாயத்தில் மனிதன் முகம் கொடுக்கும் சவால்கள் ஏராளம். அவற்றை சமாளிப்பதற்கு அல்லது அவற்றை வெற்றி கொள்வதற்கு தன்னால் முடியாத சந்தர்ப்பங்களில் பயம் தன்னை தொற்றிக் கொள்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் அப்பயத்தை அல்லது பயத்தால் ஏற்படும் பாதுகாப்பற்ற தன்மையை எதிர்கொள்ளமுடியாத நிலையில் ஒன்றில் அதற்கு எதிராக போராடுவர், இல்லை அதை கடந்து செல்வர். இந்த பய உணர்வு ஒருவரின் தனிப்பட்ட வாழ்வை மட்டுமின்றி அவரின் சமூக நிலையிலும் பாதிப்பு செலுத்துவதாக காணப்படுகின்றது.

பயம், வெட்கம், மேடை கூச்சம் போன்றவற்றால் சமூகத்திலிருந்து ஒதுங்கி இருத்தல், தன்னை தாழ்த்திக் கொள்ளல் இதனால் சமூகத்தில் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம். இன்றைய தொழில்நுட்ப உலகிலும் கூட மாணவர்கள் எதிர்கொள்கின்ற முக்கிய சவாலாக இந்த பயம் என்ற மனவெழுச்சி காணப்படுகின்றது. இதனால் வகுப்பறையிலும் சரி சமூகத்திலும் சரி மாணவர்கள் கிடைக்கின்ற வாய்ப்புகளை தவறவிடுகின்றனர், தட்டிக் கழிக்கப்படுகின்றனர். மாணவர்களின் இவ்வாறான மனவெழுச்சி தாக்கங்களினால் அவர்களின் செயற்றிறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தாக்கங்களிலிருந்து விடுபட்டு மாணவர்கள் சகல துறை வளர்ச்சியிலும் முன்னேற அனைவரும் கருத்துடன் செயற்பட வேண்டும். அத்துடன் மாணவர்களது ஆற்றல்களை மேம்படுத்துவதற்குரிய களமாக அமைவது பாடசாலையாகும். கல்வியின் நோக்கங்களுள் முதன்மையானதாக திகழ்வது நாட்டுக்கும் சமூகத்துக்கும் உதவும் நற்பிரஜைகளை உருவாக்குதலே இது தனியாள் ஆளுமை விருத்திக்கும் உதவும். ஆதலால் பாடசாலையானது வெறுமனே புத்தக ரீதியான அறிவை மாத்திரம் வழங்கும் நிலையமாக இல்லாமல் மாணவர்களது திறன் மற்றும் உளரீதியான மனப்பான்மை விருத்திக்கும் உதவும் நிலையமாக அவர்களை சமூகத்தோடு ஒன்றிணைத்து துலங்க செய்யும் வகையில் கல்விச் சமூகமயமாக்கல் மூலம் சமூகத்தோடு இணைந்து பயணிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

வகுப்பறையில் உள்ள மாணவர்கள் பல் திறந்தவர்களாக காணப்படுவார்கள். அவர்களின் ஆற்றல்கள், இயல்பூக்கங்கள், விருப்பு வெறுப்புகள் வேறுபட்டவையாக இருக்கும். இதனால் ஆசிரியர் கற்பிப்பதைபோல, தனியாள் வேறுபாடுகளை இனம் காண்பதிலும் ஒவ்வொரு மாணவனையும் விளங்கிக் கொள்வதிலும் கவனத்தை அதிகம் செலுத்த வேண்டும். பயம் காரணமாக சில மாணவர்கள் பொருத்தப்பாடற்ற நடத்தைகளில் ஈடுபடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தண்டனை வழங்க முற்படுகையில் பயம், வெட்கம் போன்ற மனவெழுச்சிகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு. இதனை கருத்தில்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்களை கல்விச் செயற்பாடுகளின் ஊடாக சமூகமயமாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமே அவர்களின் பய உணர்வை நீக்கி ஏனைய மாணவர்களோடும் சமூகத்தோடும் சுமுகமான உறவையும் அவர்களின் செயற்றிறன்களையும் விருத்தி செய்து கொள்ளவும் உதவ முடியும்.

பிளசிட் (1980) என்பவர் ஆரம்பம், இடைநிலை என மனவெழுச்சிகளை இருவகையாகக் காட்டியுள்ளார். இதில் ஆரம்ப மனவெழுச்சிகளாக மகிழ்ச்சி, ஏற்றுக்கொள்ளல், புதினம், பயம், துக்கம், அவமானம், எதிர்பார்ப்புகள், கோபம் முதலிய எட்டு விடயங்களையும் இடைநிலை மனவெழுச்சிகளாக ஆடம்பரம், அன்பு, வெட்கம் போன்ற விடயங்களையும் குறிப்பிடுகின்றார். மாணவர்கள் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும்போது ஆசிரியர்கள் அவற்றை உடன்பாடாக எடுத்துக்கொண்டு அதனைப் பொருத்தமான வகையில் திசைமுகப்படுத்துதல் வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

பேச்சுப்போட்டிகள், பொருட்காட்சிகள், சுவர்ப்பலகைப்பயன்பாடு, கவிதை, கட்டுரை போன்ற செயற்பாடுகளில் பயத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். மேலும் பாடசாலையில் மறைக்கலைத்திட்டம், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளினூடாக இம்மாணவர்களை கல்விச் சுற்றுலா, விளையாட்டு முதலுதவி, சாரணியம், விழாக்கள், பெருங்காட்சி மாணவர் மற்றும் போட்டி, மன்றம், கண்காட்சி பல்வேறு மன்றங்கள் அல்லது கழகங்களின் செயற்பாடுகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

சாரணிய இயக்க செயற்பாடுகளின் சாரணியர் பாடல், சர்வதேச மூலமாக சமய வழிபாடு, உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டி, முதலுதவி சிகிச்சை, மனக்கட்டுப்பாடு, ஒழுக்க பண்பு, சேவை மனப்பான்மையை வளர்த்தல், தலைமை பண்பு, பிறருக்கு உதவுதல், கூடாரம் அமைத்தல், தீயணைப்பு போன்ற பல்வேறு செயற்பாடுகள் விருத்தி பெற சாரணிய இயக்கம் உதவுகின்றது. ஏனைய பாடசாலை மாணவர்களோடு தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகளை சாரணிய இயக்கம் ஏற்படுத்திக் கொடுப்பதனால் அம்மாணவர்களை ஏனைய மாணவர்களோடு இணைத்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன்மூலம் பயம், கூச்ச உணர்வை நீக்கி சமூகமயமாகும் தன்மையை விருத்தி செய்யலாம்.

குடும்பப் பருமன், பிள்ளைகளை வளர்க்கும் பாங்கு, குடும்ப உறுப்பினரிடையில் நிலவும் உறவுகள், குடும்ப அக அமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், அண்மைக்காலச் சமூக மாற்றங்கள், குடும்பத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள், பிள்ளைகளின் சமூகமயமாக்கத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன (Gidden 1990). வீடுகளின் தற்கால சூழ்நிலைகள் பிள்ளைகளின் பய உணர்வை அதிகரிப்பதாகவே அமைந்துள்ளன. குறிப்பாக பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லுதல், தாய், அல்லது தந்தை அல்லது இருவரும் வெளிநாடு செல்லுதல், விவாகரத்து போன்ற காரணங்களால் பிள்ளை தனித்துவிடப்படும் சூழ்நிலை அதிகரித்துள்ளது. இதனால் சிறுவர் துஷ்பிரயோகமும் தற்கொலை செய்யும் வீதமும் அதிகரித்துச் செல்கின்றன. ஆசிரியர் இவற்றைக் கவனத்தில்கொண்டு இத்தகைய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு குழுத் தலைவர், வகுப்புத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற பதவிகளை வழங்கி அவர்களது ஆளுமைத் திறன்களை விருத்தி செய்தல் வேண்டும். இதன்மூலம் அவர்களது சுய நம்பிக்கையும் வெற்றி உணர்வும் சுதந்திரத்தன்மையும் விருத்தி பெறும். பரீட்சைகளின்போது பயத்தை அல்லது பீதியை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு வகுப்பறை மட்டத்திலேயே பல்வேறு போட்டி நிகழ்வுகளையும் சிறு, சிறு பரீட்சைகளையும் நடத்தி அவர்களது சிறு, சிறு துலங்கல்களையும் மீளவலியுறுத்துவதன் ஊடாக அவர்களது பயத்தை படிப்படியாக அகற்ற முடியும்.

மனவெழுச்சியில் பயம் என்பது தூண்டல்களால் வேறுபாடானது. இது தூண்டப்படுகின்ற மனநிலையாகும் என (ஸ்கின்னர்,1938) கூறுகின்றார். இதற்காக ஸ்கின்னரின் நிரலித்த கற்பித்தல் முறை (programmed learning) போன்ற முறைகளைப் பயன்படுத்த முடியும். பய உணர்வு காரணமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தியானம், உளப்பயிற்சி போன்ற முறையியல்களைப் பயன்படுத்தி அவர்களது மனோநிலையைச் சுயமாகக் கட்டுப்படுத்தி மனவலிமையை அவர்களுக்கு ஏற்படுத்த முடியும். மாணவர்களை வரவேற்றல், அவர்களது செயல்களைப் பாராட்டுதல், அவர்களது சுயவாழ்க்கையின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுதல், அவர்களில் கண்தொடர்பு வைத்தல் போன்ற செயன்முறைகளில் ஆசிரியர் ஈடுபட்டு விருத்திப் போக்கினைத் தொடர்ச்சியாக அவதானித்தல் வேண்டும். பய உணர்வு கொண்ட மாணவர்களைப் பெயரிட்டு அழைத்தல், அவர்களைத் தனித்தனியே பாராட்டுதல், தமது பய உணர்வுகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குதல், பொருத்தமான சகபாடிகளின் இணைப்புக்கு வழிசமைத்தல் மற்றும் குழு ஒத்துழைப்பைத் தூண்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஒரு ஆசிரியர் ஈடுபட முடியும். கூட்டுறவுக் கற்றல் முறைகளைப் பிரயோகித்தல், ஆக்கத்திறனை வளர்ப்பதனூடாக பய உணர்விலிருந்து அவர்களை வெளிக்கொணர்தல், அவர்கள் அவர்களது கருத்துகளைச் சிரத்தையுடன் செவிமடுப்பதுடன் தொடர்ச்சியான மீளவலியுறுத்தல்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளிலும் ஒரு ஆசிரியர் ஈடுபட முடியும்.

கருத்து முரண்பாடுகளை ஏற்றுக்கொள்ளப் பழக்குதல், வெற்றி, தோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளப் பழக்குதல், குற்ற உணர்வைப் போக்க உதவுதல், தாழ்வுச்சிக்கலிலிருந்து விடுபட உதவுதல், தமது மனவெழுச்சிகளை இனங்காணும் திறனை வளர்த்தல், தமது மனவெழுச்சிகள் உருவாக்கும் சாதக, பாதக விளைவுகளை மதிப்பீடு செய்யும் திறன்களை வளர்த்தல் போன்ற செயற்பாடுகளில் ஒரு ஆசிரியர் ஈடுபட முடியும். இந்தியாவின் 11ஆவது குடியரசு தலைவராக பணியாற்றிய டாக்டர் அப்துல்கலாம் தனது சிறுவயது கல்வியின்போது அதிகமாக தாழ்வு மனப்பான்மை கொண்டவராகவும் கல்வியில் பயம் கொண்டவராகவும் காணப்பட்டார். ஆனால் அவர் பயத்தால் கூனிக்குறுகி நில்லாமல் தனது அயராத முயற்சியின் விளைவாக வான்வெளி பொறியியலாளராக மாறினார். அதற்கு அவரின் தற்றுணிவு, தன்னம்பிக்கையே காரணமாகும் என பல மேடைகளில் கூறியுள்ளார்.

இவ்வாறு மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலான அறிஞர்களின் வாழ்க்கை சரித்திரங்களைக் கூறி வழிப்படுத்துவதன் மூலம் அவர்களின் பய உணர்வை முழுமையாக நீக்க முடியாவிடினும் அதற்கான ஊக்கத்தை வழங்க முடியும். தற்காலப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களே தமது மனவெழுச்சிகளை முகாமை செய்யத் தெரியாதவர்களாக உள்ளனர். மாணவர்களின் முன்னிலையிலேயே சண்டையிடும் ஆசிரியர்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் மாணவர்களின் மனவெழுச்சிகளை முகாமை செய்வது எந்தவகையில் சாத்தியமாக இருக்கலாம். எனவே ஆசிரியர்கள் தமது மனவெழுச்சிகளை முகாமை செய்வதுடன் மாணவர்கள் தமது மனவெழுச்சிகளை முகாமை செய்யவும் துணை புரிதல் வேண்டும். குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் மத்தியில் பய உணர்வும் அது சார்ந்த மனவெழுச்சிகளும் அதிகளவு வெளிப்படுவதால் ஆசிரியர்கள் கூடுதலாக மாணவர்களின் பய உணர்வை முகாமை செய்வதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். மேற்கூறப்பட்ட சமூகமயமாக்கல் செயற்பாடுகள் கல்வியினூடாக வழங்கப்படுமெனின் பயத்தால் ஆற்றல்களை மறைத்து சமூகத்திலிருந்து விலகி, சமூகத்திலும் சரி, வகுப்பறையிலும் சரி தட்டிக்கழிக்கப்படும் மாணவர்களுக்கும் வாய்ப்புகள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.



**தி.ச.சி. நந்தினி,**
**விடுகை வருடம்,**
**கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவி,கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

# சமூகவியல் நோக்கில் மாணவர்களுக்கான தண்டனை

சிறுவர் துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் மாணவர்களுக்கு தண்டனை வழங்காமல் இருப்பது குறித்து பரவலாகப் பேசப்படுகின்ற இக்காலகட்டத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தண்டனை வழங்காமல் இருப்பது பொருத்தமானதா என்பது குறித்து சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தண்டனை வழங்குவது பொருத்தமற்றது என்ற கருத்தாடல்கள் மாறி தண்டனைகள் இல்லாத நிலைமை மாணவர்களின் கல்வியை வெகுவாக பாதிக்கின்றது என்ற வாதப்பிரதிவாதங்கள் இன்றைய சமூகத்தினரிடையே எழுந்துள்ளன. மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவதன் மூலம் நன்னடத்தையை விருத்தி செய்து கொள்ளவும் தீய நடத்தைகளை தண்டனை வழங்குவதன் மூலம் நீக்கிக் கொள்ளவும் முடியும். சிறுபிள்ளைகளுக்கு ஊக்குவிப்புகளாக பரிசுகள் வழங்கப்படும்போது மகிழ்ச்சிகரமான கற்றல் நடைபெறுவது போன்றே தண்டனைகளை வழங்குவதன்மூலம் கற்றல்மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களையும் அடைந்து கொள்ள முடியும்.

பரீட்சையில் 90 புள்ளிகளைப்பெற்ற மாணவனை ஊக்குவிக்கும் முகமாக பரிசுகளை வழங்கும்போது அம்மாணவன் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு தூண்டப்படுகின்றான். மீண்டும் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு அம்மாணவன் பரிசில்களையும் வெகுமதிகளையும் எதிர்பார்க்கின்றான். பரிசுகள் கிடைக்காத போது மனமுறிவு ஏற்பட்டு நோக்கங்களை கைவிடுகின்றான். உதாரணமாக இன்றைய நிலையில் பெற்றோர்கள், சிறுவர்களை ஊக்குவிப்பதாகக் கருதி தொலைபேசியில் விளையாட்டுகளை விளையாடுவதற்கு வாய்ப்பளிக்கின்றனர். பின் தொலைபேசி விளையாட்டுகளுக்கு பழக்கப்பட்ட பிள்ளைகள் தொலைபேசி இல்லாமல் சாப்பிடவோ படிக்கவோ மாட்டோம் என அடம்பிடிக்கும் நிலைமைகளையும் காண்கின்றோம்.

பெற்றோர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் பிள்ளைகளுக்குத் தேவையான ஊக்குவிப்புகளை வழங்கும் பொருட்டு பிள்ளைகள் விரும்பிய பொருட்களை வாங்கிக் கொடுக்கின்றனர். பெற்றோர்களின் இத்தகைய செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாக இருப்பினும் பின்நாளில் இத்தகைய செயற்பாடுகளே பிள்ளைகளை முறைகேடான செயற்பாடுகளை நோக்கிக்கொண்டு செல்வதாக அமைகின்றன. பரிசில்களாலும் பாராட்டுகளாலும் மாத்திரம் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஏனெனில், பரிசில்கள், பாராட்டுகள் இல்லாத மாணவர்களும் கூட சிறந்த அடைவுகளை பெறுவதுண்டு.



இப்பின்னணியில் மாணவர்களின் கற்றல் அடைவில் தண்டனைகளின் அவசியம் குறித்து ஆராய வேண்டியது இன்றியமையாததாகும். ஏனெனில், ஆரம்ப காலங்களில் குடும்பத்திலும் பாடசாலைகளிலும் மாணவர்களை கண்டித்ததன் ஊடாக மாணவர்கள் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் சமூக பொருத்தப்பாடு உடையவர்களாகவும் மாறியுள்ளமையை காண முடிகின்றது. ஆனால், இன்றைய நிலையில் மனித உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம் முதலானவற்றுக்கு பயந்து மாணவர்கள் விடுகின்ற தவறுகளை கண்டும் காணாமலும் கடந்து செல்லும் போக்கு உருவாகியுள்ளது. இதனால் ஒழுங்கற்ற மாணவர் சமுதாயமொன்று உருவாகி வருவதை காண முடிகின்றது.

“குற்றம் இழைத்தவர்களுக்கு அவர்களது குற்றத்துக்கு தகுந்த விதத்தில் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அல்லாதபோது நீதியினம் ஏற்படும்” எனும் இமானுவேல் கான்ட்டின் கருத்துக்கு அமைவாக தவறுகளுக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. பரிசுத்த வேதாகமத்தில் நீதிமொழிகள் 23:13-14 இல் ‘‘பிள்ளையை தண்டியாமல் விடாதே அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான்’’, ‘‘நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே’’ என்பதன் ஊடாக தண்டனைகள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் சாதனம் என்பது புலனாகின்றது.

தண்டனைகள் இல்லாதபோது ஒழுக்கமின்மை, சமத்துவமின்மை, துர்நடத்தைகள் என்பன மேலோங்குகின்றன. பொதுவாக மாணவர்களின் உளவியல் கண்ணோட்டத்தில் தண்டனை வழங்குவது குறித்து எதிரான கருத்துகள் காணப்படுகின்றபோதும் எதிர் மீள வலியுறுத்தி என்ற அடிப்படையில் தண்டனைகள் குறித்து ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். தண்டனை வழங்குவதன் நோக்கம் மாணவர்களிடம் உளவியல் ரீதியாகவோ உடல் ரீதியாகவோ துன்பத்தை ஏற்படுத்துவது அல்ல. மாறாக, குற்றமிழைத்த மாணவனை நல்வழிப்படுத்துவதாகும்.

மாணவர்களின் ஒழுக்கக்கேடான நடத்தைகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்திக்கும் வண்ணமாக தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும் இன்றைய நிலையில் பாடசாலை மட்டங்களில் தண்டனைகள் வழங்கப்படும் நிலையானது குறைவடைந்துள்ளது. இன்று பெரும்பாலும் குற்றமிழைத்த மாணவர்களுக்கான தண்டனைகளாக எச்சரிக்கை செய்தல் மாத்திரமே காணப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் மாணவர்களின் ஒழுக்கக்கேடான நடத்தைகள் மேலோங்கும்போது மாணவர்களை ஆசிரியர்கள் கண்டிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு எதிராக பெற்றோர்களும் சமூகமும் கிளர்ந்தெழுந்து போராட்டங்கள், மனித உரிமை வழக்குகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற எண்ணிலடங்கா வழக்குகளைப் பதிவு செய்து ஆசிரியர்களுக்கு எதிராக இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள் முதலான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

உண்மையில் ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிக்க வேண்டும் என்றோ அல்லது உடலியல் ரீதியாக காயப்படுத்த வேண்டும் என்றோ தண்டிப்பதில்லை. மாணவர்களின் குற்றங்களை பொருட்படுத்தாது ஆசிரியர்களுக்கு எதிராக கிளர்ந்தெழும் சமுதாயம் தம்மை அறியாது தமக்குத் தாமே தீங்கு விளைவித்துக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றது. இருப்பினும், மாணவர்களை உளவியல் ரீதியாகவோ உடலியல் ரீதியாகவோ தண்டிப்பதும் பொருத்தமற்றது. அதனால் மாணவர்களுக்கான தண்டனைகள் மாணவர்களை கற்றலின் பால் முன்னோக்கி கொண்டு செல்வதாக அமைய வேண்டும். உதாரணமாக, வகுப்பறையில் நெறிபிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவனை தண்டிப்பதற்கு அவனை புத்தகத்தில் உள்ள ஒரு உரைநடையை வாசிக்கச் செய்தல், மாணவர் ஒன்று கூடலில் நற்சிந்தனை ஒன்றினை முன்னெடுக்கச்செய்தல், திருக்குறள் ஒன்றினை மனனம் செய்ய வைத்தல் போன்ற ஆக்ககரமான தண்டனைகளை வழங்கலாம். இத்தகைய தண்டனைகள் மாணவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை இழிவளவாக்குவதாகவும் அமையும். இதனையே Academy of pediatrics (2019) “குழந்தைகள் மற்றும் கட்டிளமைப்பருவ மாணவர்களின் பொருத்தப்பாடற்ற நடத்தைகளை தடுக்க உடல் அல்லது வாய்மொழி ரீதியான தண்டனைகளை பயன்படுத்துவதை விட ஒழுக்க விழுமிய உத்திகளை பயன்படுத்துமாறு ஊக்குவிக்கின்றது’’.

ஆசிரியர்களால் வழங்கப்படும் தண்டனைகள் அழிவுகளை ஏற்படுத்துபவையாக அன்றி மாணவர்களில் நடத்தை மாற்றங்களையும் திறன் மேம்பாடுகளையும் ஏற்படுத்துவதாக அமையும்போது கற்றலினால் அடைந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படும் இலக்குகளை ஆக்ககரமான தண்டனைகளின் ஊடாகவே அடைந்து கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

**பரமதயாளன் மதுசன்,**
**நான்காம் வருடகல்வியியல் சிறப்புக் கற்கை மாணவன், கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

# வனவிலங்கு கணக்கெடுப்பில் தவறவிட்டவையும் தரவுகளின் முக்கியத்துவமும்

கலாவர்ஷ்னி கனகரட்ணம்



பரந்து விரிந்து கிடக்கும் நெல்வயல்கள், பருவம் பார்க்காமல் காய்த்துத் தொங்கும் வாழைக்குலைகள், காற்றில் அசைந்தாடும் சிறுபயிர்கள் என இலங்கை செழித்திருந்தாலும் விலங்கினங்களால் ஏற்படும் பயிர் அழிவுகளுக்கு மத்தியில் விவசாயிகள் தமது வாழ்க்கைப் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கும் விலங்குகள், பயிர்களை நாசப்படுத்தி, வீடுகளை சேதப்படுத்தி கிராமப்புற சமூகங்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளன. இவற்றின் இனப்பெருக்கம் சடுதியாக அதிகரித்துச் செல்கின்ற நிலையில், 2025 மார்ச்சில் குரங்குகள், மயில்கள் மற்றும் மர அணில்களைக் குறிவைத்து, நாடு தழுவிய வனவிலங்கு கணக்கெடுப்பை நடத்தி, இலங்கை அரசாங்கம் ஒரு ஆரம்ப நடவடிக்கையை முன்னெடுத்தது.

நம்பிக்கையைத் தூண்டுவதாக இந்த முயற்சி அமைந்தாலும் கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டது. அநுராதபுரம், பதுளை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள பல விவசாயிகள், கணக்கெடுப்புக் குழுக்கள் அங்கு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். பயிர்ச்சேதங்களை பார்வையிட தமது விவசாய நிலங்களுக்கு அதிகாரிகள் வரவில்லை என்றும் அங்கலாய்க்கின்றனர். உள்ளூர் சமூகத்தினரை உள்வாங்காமல் இத்திட்டம் மேல்மட்டத்தில் திட்டமிடப்பட்டதாக மக்கள் கருதுகின்றனர். விமர்சனங்களும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளும் இனங்காணப்பட்டபோதும் தீர்வை நோக்கிய பயணத்தில் இந்தக் கணக்கெடுப்பும் ஆய்வும் முக்கியமானது.

**உண்பதை விட அழிப்பதே அதிகம்**

விவசாய அமைச்சின் கூற்றுப்படி, வனவிலங்குகள் தொடர்பான சேதங்களால் இலங்கை ஒவ்வொரு ஆண்டும் அதன் மொத்த விவசாய உற்பத்தியில் 20 வீதத்தை இழக்கின்றது. இந்த அழிவின் பெரும்பகுதிக்கு, அதிகரித்துச் செல்லும் குரங்குகளே காரணம் என்பது பரவலான குற்றச்சாட்டாகவுள்ளது. கூட்டமாக கிராமத்துக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் வருவதால், மக்களுக்கு இவற்றை சமாளிப்பது சவாலாகவுள்ளது. விவசாயப் பயிர்களையும் காய்களையும் உண்ணுவதை விட, அவற்றை நாசப்படுத்தி பிய்த்தெறிந்து அழிவை ஏற்படுத்துவதே அதிகமாகவுள்ளது என்கின்றார் பதுளையைச் சேர்ந்த விவசாயியான அன்டன் செல்வரத்னம். வேலியமைத்தல், உரத்த சத்தங்களை எழுப்புதல், நாய்களை விட்டு துரத்துதல் போன்ற முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைவதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

**கணக்கெடுப்பின் நோக்கம்**

இலங்கை இதற்கு முன்னர் கடந்த 2011இல் நாடு தழுவிய யானை கணக்கெடுப்பு போன்ற வனவிலங்கு கணக்கெடுப்புகளை நடத்தியிருந்தது. எனினும், 2025 மார்ச் கணக்கெடுப்பானது, குறிப்பாக குரங்குகள், மயில்கள் மற்றும் அணில்கள் உட்பட குறிப்பிடத்தக்க பயிர் சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளை மையமாகக் கொண்ட முதலாவது நாடு தழுவிய கணக்கெடுப்பாக அமைகின்றது. இதன் நோக்கங்கள் வருமாறு - குரங்குகள், மயில்கள் மற்றும் அணில்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல். மனித-வனவிலங்கு மோதல் ஏற்படும் இடங்களை அடையாளம் காணுதல். மனிதாபிமான ரீதியிலான மற்றும் சான்றுகள் அடிப்படையிலான வனவிலங்கு முகாமைத்துவ கொள்கைகளை உருவாக்குதல்.

கிராமப்புறங்கள் மற்றும் தூரப்பிரதேசங்களை இந்த கணக்கெடுப்பில் உள்வாங்குவதில் காணப்பட்ட இடைவெளிகளை வனவிலங்கு திணைக்களமும் விவசாய அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளன. "இதன்மூலம் அறிவியல் பூர்வமான தீர்வை அடைய முடியும். இன்றுவரை, அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருப்பினும், இந்த முயற்சியை நாம் ஆரம்பித்துள்ளோம். ஆரம்ப கட்டம் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யாமல் போகலாம். ஆனால் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை கண்டறிய முடியும். இதன் அடிப்படையில், வன விலங்குகளை நிர்வகிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும்" என விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். விலங்குகளை நிர்வகிப்பதா அல்லது வேறு நாடுகளுக்கு வழங்குவதா என்பதை தீர்மானிக்கவும் இந்த கணக்கெடுப்பு உதவும் என அவர் கூறியிருந்தார்.

**பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

2024 பிற்பகுதியில் குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்தது. அதன் முதல்கட்டமாக மத்திய மாகாணத்தில் பிடிபட்ட குரங்குகள் கருத்தடை செய்யப்பட்டு மீண்டும் அவற்றின் வாழ்விடங்களில் விடப்பட்டன.

ஆசியாவில் ஒரு அரிய மற்றும் புதுமையான அணுகுமுறையைக் குறிக்கும் வகையில், பெண் குரங்குகளுக்கு கருப்பையக சாதனங்களை (IUD) பயன்படுத்துவது குறித்தும் தொடர்ந்து ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் கருத்தடை செய்வதால் மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காதென வைத்தியர் சமித் நாணயக்கார போன்ற ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

**உலகளாவிய படிப்பினைகள்**

குரங்குத் தொல்லையானது, இலங்கைக்கு மாத்திரம் உரித்தான பிரச்சினையல்ல. குறிப்பாக இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான குரங்குகளுக்கு கருத்தடை செய்யப்பட்டது. இச்செயற்பாடு, சுமார் 25 வீத பயிர்ச்சேதத்தை குறைப்பதற்கு வழிவகுத்தது.

தாய்லாந்தில், விலங்குகளுக்கு உணவு வழங்குவதற்கென விசேட பகுதிகள் அமைக்கப்பட்டதோடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா திட்டங்களை அந்நாடு கட்டியெழுப்பியது. இது மக்கள் வருமானத்தை பெற்றுக்கொள்ள உதவியதுடன் மனித-விலங்கு மோதல்களைக் குறைக்கவும் உதவியது.

இந்தோனேசியாவில், உள்ளூர் சமூகத்தின் ஈடுபாட்டுடன் சமூகப் பயிற்சி மற்றும் குரங்கு தடுப்பு உட்கட்டமைப்பு திட்டங்களில் அரசாங்கம் முதலீடுகளை செய்துள்ளது. தரவுகள், சமூக ஈடுபாடு மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான தீர்வுகளை இந்த உதாரணங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**சகவாழ்வுக்கான வழிகள்**

அண்மைய கணக்கெடுப்பில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் உள்ளபோதும் தரவு சேகரிப்பில் முக்கியமான தொடக்கப்புள்ளியாக இது அமைகின்றது. எனினும், அடுத்தகட்டமாக அறிவியல்பூர்வமான ஆய்வை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதில் உள்ளூர் சமூகத்தின் ஒத்துழைப்புடன் முழுமையான மற்றும் புதுப்பிக்கத்தக்க கணக்கெடுப்பை மேற்கொள்ளவேண்டும். அத்தோடு, குரங்குகளின் நடமாட்டம் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை



அடையாளம் காண்பது அவசியம்.

அடுத்ததாக குரங்கு தடுப்பு உபகரணங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட வேலிகளை பரிந்துரைக்கலாம். உயிர்ச்சேதம் விளைவிக்காமல் கால்நடை மருத்துவ மேற்பார்வையுடன் கருத்தடை திட்டங்களை அதிகரிக்க முடியும். ஆனால், அவை உயிர் பல்வகைமையை பாதிக்காமல் சமநிலையை பேணிக்கொண்டு செய்யவேண்டியது அவசியம். மிகவும் அவசியமான கட்டத்தில், அவற்றை வேறு இடங்களுக்கு கொண்டுசெல்வது உகந்தது.

உணவுகளையும் கழிவுகளையும் முறையாக அகற்றாமையும் குரங்குகள் மனித வாழ்விடங்களை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.  இந்நிலையில், கழிவகற்றல் மற்றும் முறையற்ற ரீதியில் விலங்குகளுக்கு உணவளித்தலை தடுத்தல் பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களை முன்னெடுப்பது அவசியம். பாடசாலை மட்டத்தில் இருந்து இச்செயற்பாட்டை ஆரம்பிப்பது உகந்தது. உயிர்ப்பல்வகைமை பற்றி சிறுவயது முதல் கற்பிக்கும்போது, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒரு பங்காளர்களாக அவர்கள் மாறுவார்கள்.

குறுகிய கால சீர்திருத்தங்களை நோக்காகக் கொள்ளாமல், நீண்டகால சகவாழ்வுத் திட்டங்களுக்கு நிதியளிப்பதும் கொள்கை சீர்திருத்தங்களை முன்னெடுப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

கணக்கெடுப்பு பெரும்பாலான கிராமங்களை சென்றடையவில்லை என்பது உண்மைதான். எனினும், இந்த தொடக்கப்புள்ளியானது அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகளுக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்குமான கதவைத் திறந்துள்ளது. பாதிக்கப்பட்ட சமூகங்களையும் ஈடுபடுத்திக்கொண்டு இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கும்போது, பிராந்தியத்தில் மனித-விலங்கு மோதலை நிர்வகிப்பதற்கான ஒரு முன்மாதிரியாக இலங்கை மாற முடியும். குரங்குகளை அகற்றுவதல்ல நோக்கம் – மாறாக இயற்கை சமநிலையை மீட்டெடுப்பதாகும். அதற்கு தரவுகளும் உரையாடல்களும் உறுதிப்பாடுகளும் அவசியம்.



# கச்சதீவு சில அறியாத விடயங்கள்!



**கச்சதீவு பற்றி சில செய்திகளைச் சொல்ல வேண்டியது அவசியம்**

டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இலங்கையை ஆண்டபோது 1921ஆவது வருட காலங்களிலேயே கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமென்று சொல்லிவிட்டார்கள். அது குறிப்பாக, இராமநாதபுர அரசருக்குச் சொந்தமானது என்பதில் ஒரு மாற்றுக்கருத்தும் இல்லை. அதற்கான ஆவணங்கள் இருக்கின்றன. அன்றைய இலங்கையின் வரைபடத்திலும் கச்சதீவு இந்தியாவின் பகுதியாகவேதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய வரைபடத்திலும் கச்சதீவு சேர்க்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே இவையெல்லாம் பேசி முடிவுசெய்யப்பட்டவைதான்.

பிறகு ஒரு காலகட்டத்தில் அரசு குடியரசு தின விழாவொன்றுக்கு டெல்லியில் மத்திய அரசு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார்கள். பண்டாரநாயக்க கலந்துகொண்டார். அதன் பிறகு அவர் இலங்கைக்குத் திரும்ப இரண்டு மூன்று நாட்கள் தாமதமாகிவிட்டன.

பிரதமர் இந்திராகாந்தி கூட அதிகாரிகளை அழைத்து, என்ன பண்டாரநாயக்க இந்தியாவைச் சுற்றிப் பார்க்கிறாரா, சிங்களவராக இருப்பதால் புத்தகயாவை சென்று பார்த்துவிட்டுத் திரும்புகிறாரா, இல்லை உடல்நிலை ஏதும் சரி இல்லையா, ஏன் இன்னும் இலங்கைக்குத் திரும்பவில்லை என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

இல்லை, ஏதோ உங்களிடம் பேசவேண்டும் என்று காத்திருக்கிறார். ஆனால், தயக்கத்துடன் இருக்கிறார் என்பதாக அவரிடம் சொல்லப்பட்டது.

உடனே இந்திரா அம்மையார் அவரை தனது வீட்டுக்கு அழைத்து வீட்டின் பின் வராந்தாவில் அமர வைத்துப் பேசுகிறார். அவரது உடல்நிலை பற்றியும் இந்தியாவைச் சுற்றி பார்க்கிறீர்களா என்றெல்லாம் ஆர்வமாக விசாரிக்கிறார்.

திருமதி பண்டாரநாயக்க ஏதும் பேசாமல் மௌனமாக இருக்கிறார். ஆனால், அவருடன் வந்த இலங்கை வெளிவிவகாரத் துறை செயலாளர் விசயத்தைப் போட்டுடைக்கிறார். நாங்கள் கச்சதீவை எங்களுக்குத் தருமாறு கேட்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்.

உடனே இந்திரா அம்மையார், அதை எப்படிக் கொடுக்க முடியும்? அது தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. அதை உங்களுக்குக் கொடுப்பது மிகுந்த சிரமமானது என்று சொல்லுகிறார்.

பிறகு ஏதோ சமாதானமாகப் பேசி, இருங்கள் பார்க்கலாம் என்றுவிட்ட பிறகு இந்தத் தகவல் சென்னையில் முதல்வர் கலைஞருக்கு உடனே தெரிவிக்கப்பட்டது. கலைஞர் அதற்குப் பதிலொன்றும் சொல்லவில்லை. பிறகு கேவல்சிங்கும் சட்ட நிபுணர் டி.கே.பாஸூம் டெல்லியிலிருந்து வந்து கலைஞரைச் சென்னைக் கோட்டையில் சந்திக்கிறார்கள்.

அவ்வாறு சந்திக்கும்போது, இலங்கை கச்சதீவை தங்களுக்கு வேண்டுமென்று விரும்புகிறது. அதுக்குப் பதிலாக இரண்டு வெற்று மணல் பரப்புள்ள சிறு தீவுகளைக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள் என்று சொல்ல, முதலில் அது எப்படி முடியும்? என்று கேட்ட கலைஞர், கவனமாக யோசித்து இந்தப் பிரச்சினையை ஒரு இரண்டு வருடங்கள் தள்ளிப்போடுங்கள் என்று சொல்லுகிறார். சட்டபூர்வமாக இப்பொழுது முடியாது,வேண்டுமானால் அமைதியாக அதை வைத்துக் கொண்டிருங்கள் என்றும் சொல்கிறார்.

அதன்பிறகு கலைஞர் இது குறித்து கட்சி கூட்டங்களையும் செயற்குழுவையும் கூட்டி ஆலோசிக்கிறார். அது பெரும்பாலும் கச்சதீவை கொடுக்கக்கூடாது என்கிற முடிவை எட்டியிருந்தாலும் கலைஞருக்கு அது சொல்லப்பட்டு விட்டது என்பதனால் அதன் நிர்ப்பந்தம் தெரிந்தே இருக்கிறது.

பிறகு 1974இல் கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பதற்கான ஒப்பந்தம் கலைஞரின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தம் 1976இல் போடப்பட்டபோது கலைஞர் ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள். ஆக இரண்டாவது ஒப்பந்தமும் முடிந்தது. இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த ஒப்பந்தமானது இரண்டு நாட்டு பிரதமர்களும் அருகருகே அமர்ந்து கையெழுத்துப் போட்டு நடக்கவில்லை.

இந்திரா காந்தி அம்மையார் டெல்லியில் கையெழுத்துப் போட்டு அனுப்புகிறார். அந்த ஒப்பந்தத்தில் பண்டாரநாயக்க இலங்கையிலிருந்து கையெழுத்துப் போடுகிறார். இந்த ஏற்பாடுகள் எல்லாம் இருநாட்டு வெளிவிவகாரத் துறை செயலாளர்களால் கடிதம் மூலமாகவே நடந்தது.

எம்.ஜி.ஆர். எப்படி சட்ட மேலவைத் தீர்மானம் இல்லாமல் சட்டமேல் சபையை மத்திய அரசுக்குக் கடிதங்கள் மூலம் கலைத்தாரோ அதுபோலவும் இதுவும் நடந்தது.

அன்றைய ஜன சங்கத்தின் தமிழ்நாடு தலைவராக இருந்த மதுரை ஜனா கிருஷ்ணமூர்த்தி இதை எதிர்த்து வழக்கு போடவேண்டுமென்று சொன்னார். இது சம்பந்தமாக நானும் நெடுமாறனும் கூட தீவிரமாக இதை மறுக்க வேண்டும் என்றெல்லாம் பேசினோம். குறிப்பாகச் சொன்னால், அந்த வழக்குக்காக நான் ஜனா கிருஷ்ணமூர்த்திக்கு அதிகம் உதவிகள் செய்தேன். உயர் நீதிமன்றத்தில் இந்த எதிர் வழக்கு ரிட் பெட்டிஷன் ஓர் எண்ணாகக் கூடப் பதிவுசெய்ய மறுக்கப்பட்டது. பதிவாளரைக்கேட்டு தலைமை நீதிபதி பேசிய பிறகுதான் அது வழக்கு எண்ணாகப் பதியப்பட்டது. அப்போது எங்கள் பகுதியைச் சேர்ந்த வீரசாமிதான் தலைமை நீதிபதியாக இருந்தார். அவர் நம்பர் பண்ணுங்கள் என்று சொல்லி ஒத்துக்கொண்டார். அதன் பிறகுதான் வழக்குப் பதிவானது. எப்படி வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டபோது அதற்கு வாதாடிய அவர் வாரிசான குருசாமி நாயக்கரை ஒரு தந்தியடித்து நாங்கள் காப்பாற்றினோமோ அதுபோலத்தான் இந்த கட்சி விவகாரத்தில் இந்த வழக்கைப் பதிவதற்கு அவ்வளவு சிரமப்பட்டோம். இப்படிக் கச்சதீவு விவகாரத்தில் பல நுணுக்கமான இன்றைக்குள்ள சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர் யாருக்குமே தெரியாத பல விஷயங்கள் அடங்கியுள்ளன. இவற்றையெல்லாம் இன்று யாரும் இந்த வரலாற்றுச் செய்திகளை பேச மாட்டார்கள்.

வெறுமனே கச்சதீவை மீட்போம் மீட்போம் என்று இப்போது வாய்ச்சவடால் அடிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

**நிரந்தரத் தீர்வு தேவை**

கடலில் அத்துமீறி தங்கள் எல்லைக்குள் புகுவதாக இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கடந்த பல பத்தாண்டுகளாகத் தொடர்கிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் மீனவர்கள் கைது

பிரச்சினைக்கு

இதுவரை நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இரு நாடுகளின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்றும் முதல்வர் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையை ஏற்று கூட்டுப் பணிக்குழுவின் 6ஆவது கூட்டம் இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் கொழும்பில் கடந்த 2024, ஒக். 29ஆம் திகதி நடைபெற்றது. இதில், தமிழக மீனவர்களுக்கு எதிராக படைப் பலத்தை தவிர்க்க வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதற்கு முன்பு, கைதுசெய்யப்படும் மீனவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்; இந்திய அரசின் தலையீட்டால் விடுவிக்கப்படுவார்கள். இப்போது இந்த நடைமுறை தொடர்ந்தாலும் தமிழக மீனவர்கள் புதுவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். கைதுசெய்யப்படும் மீனவர்களுக்கு பல மாதங்கள் சிறைத்தண்டனையும் கடுமையான அபராதமும் விதிக்கப்படுகின்றன.

மேலும், மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அந்த நாட்டு சட்டச்சிக்கல்கள் காரணமாக இந்தப் படகுகளை மீட்பது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை. படகுகள் பல மாதங்கள் அவர்களது கட்டுப்பாட்டில் இருப்பதால் தொழில் ரீதியாக மீனவர்கள் கடும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். இலட்சக்கணக்கான ரூபா மதிப்புள்ள படகுகள் இலங்கை கடற்படையினரால் சேதப்படுத்தப்படுகின்றன.

இது ஒருபுறமிருக்க, தமிழக மீனவர்கள் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதால் மீன்வளம் குறைந்து தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக இலங்கை வடக்குப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்ற போக்கை போக்கி இரு தரப்பில் பேசி தீர்வு ஏற்படவேண்டும்.கச்சதீவு அருகில் சீனாக்காரர்கள் இருப்பு வேறு இருக்கிறது. சீனா காற்றாடி மின் உற்பத்திசெய்ய இந்தத் தீவுகளை இராமேஸ்வரம் 14 கி.மீ. தொலைவில் குத்தகைக்கு எடுத்துள்ளன. இலங்கையைச் சுற்றி இந்து மகாசமுத்திரம், வங்கக்கடலில் சீனாவின் நடமாட்டம் இந்திய பாதுகாப்புக்கு நல்லதல்ல.

**கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**

**சிரேஷ்ட வழக்கறிஞர்**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7